1983

# ஈழ முழக்கம்



என்ன நிகழ்ந்தது!
எமது நாடு எரிக்கப்பட்டது,
எமது மக்கள் முகங்களை இழந்தனர்,
எமது நிலம் எமது காற்று
எல்லாவற்றிலும் அந்நியப் பதிவு

இனியும் ஏன் காத்துள்ளீர்கள்!
சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து
எழுந்து வருக!

நவம்பர் 83

7

# அம்மா என்னைத் தேடாதே!

-செழியன்

அம்மா!
என்னைத் தேடாதே!
விடுதலைக்காய்
நீண்ட நெடும்பயணம்
புறப்பட்டு விட்ட
ஆயிரக் கணக்கான
தோழர்களில்
நானும் ஒருவனாய்
கலந்து விட்டேன்!

அம்மா!
என் தங்கையிடம் கூறு!
நீண்ட நெடும் பயணத்தின்
முடிவில்- ஒருவேளை
உயிருடன் நான் இருந்தால்
திரும்பி வருவேன்!
இல்லையென்றால்...

அம்மா!
இல்லையென்றால்...
என் தோழர்கள் வருவார்கள்
விடுதலைக்காய்
குருதிக் கறைபடிந்த
என் உடைகளுடன்
என் முடிவை அறிவிக்க
என் தோழர்கள்
உன்னிடம் வருவார்கள்!

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA

# ஈழமுழக்கம்

நவம்பர் 1983 வெளியீடு : 7

## இலங்கை தமிழர் பிரச்சனைக்கு தீர்வு ஈழமே!

இலங்கையில் இனப்படுகொலை நடந்து மாதங்கள் பல முடிந்து விட்டன. இதற்கிடையில் அமெரிக்கத் தூதுவர்கள், சீனத் தூதுவர்கள், இன்னும் பலவெளிநாட்டுத் தலைவர்களையும் ஜே. ஆரும் அவரது சகாக்களும் சந்தித்து விட்டனர். ஆரம்பத்தில் இந்தியாவின் நல்லெண்ணத்தூதுவர்களையே தேவையில்லை என ஒதுக்கித் தள்ளிய ஜே. ஆர். ஜயவர்த்தன இன்று அவர்களையும் வரவற்று ஏதோ ஓர் உடன்படிக்கைக்கு வர முயற்சிப்பதாகத் தோன்றுகிறது.

ஆரம்பத்தில் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் வெயின் பேகரையும் அவரது சகாக்களையும் சந்தித்து 90 நிமிடம் பேசிய ஜனாதிபதி, பின்னர் சீனத்தின் முக்கிய தூதுவர்களையும் சந்தித்து பேசியுள்ளார். இவர்கள் எல்லோரும் ஈழ விடுதலைக்கெதிராக ஜே.ஆர். கிற்கு உதவி செய்ய வாக்களித்துள்ளதாகத் தெரியவருகின்றது. இறுதியாக இந்திய நல்லெண்ணத் தூதுவர் பார்த்தசாரதி இலங்கையில் நிற்கும்போதே மீண்டும் அமெரிக்காவின், வெளிநாட்டுக் கொள்கைக்கு பொறுப்பான ஒருவரையும் கண்டு பேசியுள்ளார். ஐக்கிய தேசியகட்சி அரசின் காபினட் கூட்டத்திலும் இவ் அமெரிக்க முக்கியஸ்தர் கலந்துகொண்டுள்ளார். 9-11-83ல் நடந்த இக் காபினட் கூட்டத்தில் சிறிலங்கா எச்சமயத்திலும் திருகோணமலையை விட்டுக்கொடுக்கக் கூடாதென்றும் அதுதொடர்ந்து ஜே. ஆர். அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே இருக்க வேண்டுமென்றும் இவர் புத்திமதி கூறியுள்ளார். அத்துடன் இலங்கை இராணுவத்திற்கு தம்மாலான முழு உதவியையும் செய்வதாக உறுதியளித்த இவ் அமரிக்கக் கனவான் ஈழப்போராளிகளை கைது செய்து சர்வதேச ரீதியாக அவப்பெயர் வாங்காமல் அவர்களை அந்தந்த இடங்களிலேயே கொலை செய்து விடும்படியும் புத்திமதி கூறியுள்ளார்.

இதன் பின்னர் ஜே. ஆர். ஜயவர்த்தன இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் சிறப்புத் தூதுவருடன் பேசும்பொழுது திருகோண மலைத் துறைமுகம் சிறீலங்கா அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதிலிருந்தே அங்கு ஏதோ சூது நடக்கின்றது என்பதை யாரும் புரிந்து கொள்ளலாம். இவை தவிர மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு கூடிய அதிகாரங்கள் கொடுத்து அவற்றை மாகாணக் கவுன்சில்களாகவோ அன்றி வேறேதாவது முறையிலோ ஈழப் பிரச்சினையை தீர்க்கலாம் என்றும் ஜே. ஆர். பார்த்தசாரதியுடன் பேசியுள்ளாராம்.

இச்சமயத்தில் ஈழதேச மக்களுக்கு மாத்திரமல்லாமல், இந்திய அரசின் கவனத்திற்கும் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றோம். இலங்கையில் இருக்கக் கூடிய சகல தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்குத் தீர்வு ஓர் சோசலிசத் தனி ஈழமே தவிர வேறொன்றுமில்லை. ஏனெனில் ஈழதேச மக்கள் தமது விருப்பத்திற்காகவோ, அன்றி, உலகத்தில் உள்ள தமிழனுக்கு நாடில்லை என்றோ நாடு கேட்கவில்லை. மாறாக 35 வருடங்களாக சிங்களப் பெருந் தேசீய வாதத்தால் அடக்கப்பட்டு சகல உரிமைகளும் பறிக்கப்பட்டு எமது இனமே திட்டமிட்டு அழிக்கப்படும் சூழ்நிலை தோன்றிய பின்பே நாம் தனிநாடு கோரி போராடத் தொடங்கினோம். 1981ம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச் சபையை உருவாக்கி அதனை குட்டிப் பாராளுமன்றம் என்றும் இதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனை தீர்ந்துவிடும் என்றும் தம்பட்டம் அடித்தார்கள். ஆனால் நடந்ததென்ன? மாவட்ட அபிவிருத்திச் சபையை உருவாக்கி அதனை குட்டி பாராளுமன்றம் என்றும் இதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனை தீர்ந்துவிடும் என்றும் தம்பட்டம் அடித்தார்கள். ஆனால் நடந்ததென்ன? மாவட்ட அபிவிருத்திச் சபை என்பது வெறும காற்றடித்த பை. இதனால் மக்களுக்கு எவ்வித விமோசனமும் இல்லை என்று மா. அ. சபைத் தலைவர்களே ஒப்புக்கொண்டார்கள். நிலைமை இப்படி இருக்கும்பொழுது மாவட்ட இணைப்புக்கள் என்பதோ அன்றி மாகாணக் கவுன்சில்கள் என்பதோ சாத்தியமான விடயமா? கேவலம் சிறுசிறு சலுகைகளையே நடைமுறைப்படுத்த முடியாமல் எல்லாவற்றையும் ஏட்டளவில் வைத்துக் கொண்டிருக்கும் சிறீலங்கா அரசு, தமிழ்பேசும் மக்களுக்கு கூடுதலான உரிமைகளைக் கொடுக்கப் போகின்றதென்றால் அது வெறும் கேலிக் கூத்து. சில சலுகைகளையே நடைமுறைப்படுத்த முடியாத அரசு எங்களுக்கு கூடுதலான உரிமைகளைத் தரும் என்பது எப்படிச் சாத்தியமாகும்? அப்படித்தான் தநதாலும் கூட அவை நடைமுறைப் படுத்தப் படுமா? இவையெல்லாம் மிகவும் ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய கேள்விகள் ஆகும்.

ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்து 6 வருட காலத்தில் இதுவரை 4 முறை இனக் கலவரம் நடந்துள்ளது. ஆரம்பத்தில் இனக்

கலவரங்களாக இருந்த இவை 1983ம் ஆண்டுடன் இனப் படுகொலையாக மாறியுள்ளது. இவ்வினப் படுகொலையையே தடுப்பதற்கு பதில் சிங்கள இனவெறியர்களுடன் கை கோர்த்து இனப் படுகொலைகளுக்கு மேலும் தூபம் போட்ட ஜே. ஆர். ஜயவர்த்தன தமிழ் பேசும் மக்களுக்கு கூடுதலான அதிகாரங்கள் தரப்போகின்றாராம். இது வேடிக்கையாய் இல்லையா? அதாவது ஒரு தேசிய இனத்தை பெரும் கொலைகளிலும், அழிவுகளிலும் இருந்து காக்க முடியாத, இல்லையேல் இனப் படுகொலைகளுக்கே காரணமாய் இருக்கும் ஒரு அரசின் கீழ் நாம் தொடர்ந்து ஒன்றாய் வாழ முடியுமா? எனவேதான் கூறுகின்றோம், இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் ஒட்டு மொத்த பிரச்சனைக்குத் தீர்வு ஈழமே தவிர வேறொன்றுமல்ல. ஏனைய தீர்வுகள் சிலசமயம் தற்காலிகத் தீர்வுகளாய் இருக்குமேயன்றி நிரந்தரத் தீர்வாய் இருக்க முடியாது.

இங்கு இன்னுமொரு முக்கிய விசயத்தை நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். சிறீலங்கா அரசு திருகோணமலைத் துறைமுகம் என்பதில் மிக உறுதியாக உள்ளது. பார்த்தசாரதியுடன் பேசும் போதே இவர்கள் இதை நேரடியாகவே குறிப்பிட்டுள்ளார்கள். இது கூட அமெரிக்க வெளிநாட்டமைச்சரின் ஆலோசனையின் பின்னரே இக்கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது. எனவே இன்றும் அமெரிக்க அரசு திருகோணமலைத் துறைமுகத்தில் எவ்வளவு அக்கறையாய் உள்ளது என்பதையும் நாம் நுணுக்கமாக ஆராய வேண்டும் திருகோணமலைத் துறைமுகமானது சிறீலங்கா அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும் வரை அது இந்தியாவுக்கு ஆபத்தானது என்பதை இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும். அமெரிக்கா சிறீலங்காவினூம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சிப்பதையும் நாம் உணரவேண்டும். அமெரிக்காவின் இவ்வாதிக்க வெறிக்கு சீனாவும், பாக்கிஸ்தானும் கூட உடந்தையாய் இருப்பது தெட்டத் தெளிவாக உள்ளது.

எனவே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மாணவரங்கமாகிய ஈழமாணவர் பொது மன்றத்தினராகிய நாம் ஒன்றைப் பிரகடனப் படுத்த விரும்புகின்றோம். இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு ஈழ தேச விடுதலையே அன்றி வேறெதுவுமாய் இருக்க முடியாது. எனவே ஈழதேச விடுதலைக்காக இறுதிவரை போராடும் நாம் அதேசமயம் ஈழமண்ணில் (இதில் திருகோணமலை உள்ளடங்கும்) அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் காலடிச் சுவடு படவும் அனுமதிக்க மாட்டோம். எனவே உலக சமாதானத்தையும், மனித சமூக விடுதலையையும் விரும்பும், இந்திய மக்களே, சர்வதேச முற்போக்கு வாதிகளே ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு உங்கள் முழு ஒத்துழைப்பைத் தாருங்கள்.

# இனம் கண்டு கொள்ளுங்கள்

ஈழ விடுதலைக்காக போராடி வரும் சில இயக்கங்கள் தமக்கிடையில் கொலைகாரத்தன இழுபறியில் கடந்த காலங்களில் ஈடுபட்டு வந்தது. இதற்கு உதாரணங்களாக சுந்தரம் கொலை, உமைகுமாரன், இறைகுமாரன் கொலை, பாண்டிபஜார் துப்பாக்கிச் சூடுகள், தேவன் கொலை போன்றவற்றைக் கூற முடியும். இது காலம்வரை இக்கொலைகாரத்தன இழுபறிகள் உமா மகேஸ்வரன் தலைமையிலான இயக்கத்துக்கும் பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையேயே இருந்து வந்தது. ஆனால் உமா மகேஸ்வரன் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இன்று இத்துறையில் இன்னும் ஒருபடி முன்னேறியுள்ளது.

மாக்சீயம், லெனினியத்தில் நம்பிக்கை கொண்டவர்களென்றும், மக்கள் விடுதலையில் நம்பிக்கை உள்ளவர்கள் என்றும் தம்மை பறைசாற்றிக் கொள்ளும் இவர்கள் இன்று ஏனைய இயக்கங்களையும் மிரட்ட தொடங்கியுள்ளார்கள். சாதாரண பாராளுமன்ற அரசியல் வாதிகளிலும் விட மிகக் கேவலமான பிற்போக்தத் தனமான நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளது மிகவும் வருந்தத் தக்கது. ஈழத்து மக்கள் மத்தியில் எந்தவித அடித்தளமும் இல்லாத இவர்கள், இன்று செய்த சிறையுடைப்புச் சம்பவத்தை தாம்செய்ததாகக் கூறி அரசியல்பிழைப்பு நடத்துகின்றார்கள். மக்கள் மத்தியில் தமது கருத்துக்கள், கொள்கைகளைச் சொல்லி அரசியல் நடத்த முடியாத இவர்கள், இன்று ஏனைய இயக்கங்களை மிரட்டுவதன் மூலம் அதனைச் சாதிக்க முடியும் என்று நம்புகின்றார்கள்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர் ஒருவர், உமா குழுவினரால் மிகவும் காட்டுமிராண்டித் தனமாக சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். இதனை விட இன்னும் சில தோழர்கள் இவர்களினால் மிரட்டப்பட்டுள்ளார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன?

தோழர்கள் தமது இயக்கத்தால் கொடுக்கப்பட்ட மட்டக்களப்பு சிறையுடைப்பு சம்பந்தமான சுவரொட்டிகள் ஒட்டியதே. சுவரொட்டிகள் கூட உமா குழுவை தாக்கி எழுதப் பட்டதல்ல. எந்த இடத்திலும் அவர்களது இயக்கத்தின் பெயரோ அன்றி அவ்வியக்கத்தில் உள்ள தனி நபர்களின் பெயரோ கூட அச்சுவரொட்டிகளில் இல்லை. இருந்தும் கூட தோழர்கள் இவர்களினால் தாக்கப்பட்டுள்ளார்கள். ஏன்? மட்டக்களப்பு சிறையை உடைத்து அங்கிருந்த ஈழப் போராளிகளை மீட்டெடுத்த இபிஆர்எல்எப்ஐச் சார்ந்த மக்கள் விடுதலைப் படை என்பது உலகறிந்த உண்மை. இதனை தாங்கள் தான் செய்ததாகவும், வேறு யாராவது செய்ததாக உரிமை கொண்டாடினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அவர்களின் அரசியல் கருத்தின் அடிப்படையிலேயே இந்தக் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அறியப்படுகின்றது. இந்நிலையில்

## அராஜகவாதம்

அராஜகவாதிகள் ஒழுங்கமைந்த மக்கள் போராட்டங்களை நிராகரிக்கிறார்கள், ஈழத்திலும்.

மக்கள் அமைப்புக்களது அவசியத்தை நிராகரித்து தனிநபர்களது துணிகர செயல்களில் மட்டும் நம்பிக்கை கொண்டவர்கள் அராஜகவாதிகள் எனப்படுகின்றனர்.

---

மட்டக்களப்புச் சிறையுடைப்பு சம்பந்தமான உண்மை நிலையையும் நாம் மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டியது எமது கடமையாகின்றது.

மட்டக்களப்புச் சிறையுபைடபுச் சம்பவமானது இபிஆர்எல்எப் இன் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படையால் திட்டமிட்டு அவர்களாலேயே நடத்தப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். அதாவது சிறையுடைப்பு சம்பந்தமாகவும் அவர்களை பாதுகாப்பாக கொண்டு செல்வதற்குமான சகல வெளிநடவடிக்கைகளும் மக்கள் விடுதலைப் படையினாலேயே மேற்கொள்ளப்பட்டது. சிறைக்கு உள்ளே இது சம்பந்தமாக அங்கிருந்த சகல போராளிகளும் கூட்டாக ஈடுபட்டார்கள் என்பதையும் நாம் எந்த நேரமும் மறுக்கவில்லை. சிறையில் இருக்கும் போராளிகள் வெளிவருவதெனில் கட்டாயமாக இதில் அவர்கள் ஒவ்வொருவரின் பங்கும் முக்கியமானது. இவ்வகையில் கூட்டான நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்பதும் தவிர்க்க முடியாததே. இதனை வைத்துக் கொண்டு தாம் தான் இச்சிறையுடைப்பை நடத்தினோம் என்றால் அது சிறுபிள்ளைத்தனமானது மாத்திரமல்ல கீழ்த்தரமானதும் கூட. இப்பொழுது உமா குழுவினர் வெளியிலும் தாம் தான் சகல நடவடிக்கைகளையும் ஆபத்தங்களையும் செய்ததாகக் கூறுகின்றனர். அதற்கு மேலால் எமது மக்கள் விடுதலைப் படை என்னென்னவற்றை செய்ததாக அறிக்கை வெளியிட்டதோ இன்று அவற்றையெல்லாம் தாம் தான் செய்ததாக உரிமை கொண்டாடுகின்றார்கள்.

மட்டக்களப்பு சிறையுடைப்பு சம்பந்தமான திட்டத்தை தீட்டி அதை நாமே நடைமுறைப் படுத்தினோம். எனவே எந்த வித தயக்கமும் இல்லாமல் அதற்கு நாம் உரிமை கோருகிறோம். இப்பொழுதும் உரிமை கொண்டாடுகின்றோம். உமா குழுவினரும் இதற்கு உரிமை கோரினார்கள். அவர்கள் இதற்கு உரிமை கோரிய இலட்சணத்தை நாம் தெளிவாகப் பார்த்தாலே இந் நடவடிக்கையை யார் மேற்கொண்டது என்பதை நாம் துல்லியமாக உணரலாம்.

ஆரம்பத்தில் ஜோதீஸ்வரன் எனப்படும் கண்ணன் கூறுகின்றார். ''தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் இராணுவத் தலைவரென தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு இதனை நாமே செய்தோம் என உரிமை கோருகின்றார்'' (ஆதாரம் மாலைமுரசு)

பின்னர் வாமதேவன் என்பவர் தானே தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் இராணுவத் தலைவர் எனக் கூறிக்கொண்டு தான்தான் இச்சிறையுடைப்பு நடவடிக்கைக்கு திட்டம் தீட்டி அதை நடாத்தி முடித்ததாக கூறுகின்றார். (ஆதாரம் நியூஸ்டுடே)

இதே வாமதேவன் இன்னொரு பத்திரிகையில் டேவிட் தான் இதற்கு திட்டம் தீட்டினுரென்றும் தான் இதை நடைமுறைப் படுத்தியதாகவும் கூறுகின்ருர்.

ஐப்பசி மாத ''மக்கள் பாதை மலர்கிறது'' என்ற பத்திரிகையில் நில அளவையாளரான உமாமகேசுவரனே இதற்கான திட்டத்தை தீட்டினுரென்றும் இதற்கு டேவிட் உதவி செய்தாரென்று கூறுகின்றது. இன்னும் பல பத்திரிகைகளில் இன்னும் பல மாதிரியான செய்திகள் வந்திருந்தாலும் கூட, இந்த செய்திகளே உண்மையைக் கண்டு பிடிக்க போதுமானது என நம்புகின்ருேம்.

உண்மையில் மட்டக்களப்புச் சிறையுடைப்பு நடவடிக்கையை இவர்கள் தான் மேற் கொண்டார்களெனில் நான்கு முரண்பட்ட அறிக்கைகள் வருவதற்கு காரணமென்ன? மக்களே சிந்தியுங்கள்.

இன்று எம்மீது பல குற்றச் சாட்டுகளைச் சுமத்துகின்ருர்கள், எந்த ஒரு குற்றச் சாட்டுக்கும் பதில் சொல்ல நாம் தயாராகவே உள்ளோம். உதாரணத்துக் ஒரு குற்றச்சாட்டை எடுத்துக் கொள்வோம். ஆகஸ்ட் 23ம் திகதி சிறையுடைப்பு நடவடிக்கைக்கு தாம் திட்டம் போட்டதாகவும் அதைநாம் காட்டி கொடுத்து விட்டதாகவும் கூறுகின்றனர். உண்மையில் ஆகஸ்ட் 23 இல் நடந்ததென்ன? வாசுதேவா என்றழைக்கப்படும் உமா குழுவைச் சார்ந்த நண்பரொருவர் குட்டி மணி, ஜெகன் கொலை செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்து 23,24,25 இல் அர்த்தால் நடாத்த ஏற்பாடுசெய்தார். அதே தினங்களில் பஸ்வண்டிகள் ஜீப்கள் எரிக்கப்பட்டதால் மட்டக்களப்பில்கூடுதல்இராணுவம்குவிக்கப்பட்டு, மட்டக்களப்பே பலத்த காவலில் வைக்கப்படுகின்றது. எனவே ஆகஸ்ட் 23-இல் மட்டக்களப்பு சிறையை உடைக்க திட்டம் போட்டார்களா? இல்லையேல் நாம் நடத்த இருந்த சிறையுடைப்பு நடவடிக்கையை தடை செய்ய அர்த்தால் ஒழுங்கு செய்தார்களா? மக்களே சிந்தியுங்கள். சிறைஉடைக்கப் போகிருேம் என்று நாங்கள் காட்டிக் கொடுத்தால் செப்டம்பர் 23-ம் தேதி மட்டும் சிறையை உடைக்க என்ன அனுமதி தந்தார்களா? யாரை முட்டாளாக்க முயற்சிக்கின்ருர்கள். மட்டக்களப்பு மக்களுக்கு தெரியும் ஆகஸ்ட் 23-இல் வாசுதேவா என்ன செய்தா ரென்று, இதற்கு மேலால் வாசுதேவாவிற்கும், மட்டக்களப்பு எஸ் பி நூர்டினுக்கும் உள்ள தொடர்பையும் நாம் அறிவோம்.

அடுத்து இன்னுமொரு குற்றச் சாட்டு திருமதி நிர்மலா நித்தியானந்தனை தோழரான தேவானந்தா என்பவர்தான் கூட்டி வருதாக இருந்ததாகவும், ஆனுல் அவர் அக்கடமையைச் செய்யவில்லை என்றும் குற்றம் சாட்டுகின்ருர்கள். இப்பொழுது நித்தியானந்தம் உயிருடன் தான் உள்ளார். அத்துடன் அவர் சுதந்திரமாக வெளியில் நடமாடுகின்ருர். அவரிடம் கேட்டாலே உண்மைபுரியும். உமா குழுவைச் சார்ந்ததாக தற்சமயம் கூறப்படும் மாணிக்கதாசனும், வாமதேவனுமே நிர்மலாவை அழைத்து வரும் பொறுப்பை ஏற்ருர்கள். நிர்மலாவை தலையில் தூக்கி கொண்டு வந்தாவது அவரைக் காப்பற்றுவோம் என்று நித்தியானந்தனுக்கு உறுதி கூறினுர்கள். எனவே எல்லோரும் சம்

மதித்தே இவ்விருவரிடமும் நிர்மலாவை மீட்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டது. ஆனுல் இந்த வீரர்கள் இருவரும் எல்லோருக்கும் முன்னுல் வந்து வானில் ஏறி விட்டார்கள். பின்னர்இப்பொழுது தாம் விட்ட இத் தவறையும் தேவானந்தா மேல் போடுகின்ருர்கள். உண்மையில் நடந்ததென்ன நிர்மலாவை யாரும் விடுவிக்க வில்லை என்பதை அறிந்த தேவானந்தா தனது கைக்கு கிடைத்த சாவிக் கொத்துடன் நிர்மலாவின் கதவைத்திறக்க முயற்சி செய்தார் முடியவில்லை. தனியாக அவரால் கம்பிகளை உடைக்கவும் முடியவில்லை எனவே வேறு சில தோழர்களை அழைத்து வர ஓடினுர் அப்பொழுது சாதாரண கைதிகள் குழப்பம் விளைவிக்கத் தொடங்கி விட்டார்கள். அத்துடன் சகல அரசியல் கைதிகளும் கூட வெளியேறியது மாத்திரமல்லாமல் சாதாண கைதிகளும் வெளியேறத் தொடங்கி விட்டார்கள். இதனுல் தேவானந்தாவும் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே தான் அவரால் நிர்மலாவைக் காப்பாற்ற முடியவில்லை. இது மிகவும் துர்ரதிஸ்டமானதே. மாணிக்க தாசனுக்கும், வாமதேவனுக்கும் கொடுக்கப்பட்ட கடமையைச் சரிவரச்செய்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. இந்த உண்மைகளை மறுத்துவிட்டு எமது தோழர்கள் மேல்குற்றம் சுமத்துகின்ருர்கள்.

இதில் இரண்டு விசயங்களை நாம் கவனிக்கலாம் என்று இவர்களே இதைச் செய்திருந்தால் முரண்பட்ட செய்திகள் வர நியாயம் இல்லை. இரண்டாவது இவர்கள் கூறும் குற்றச் சாட்டுக்கள் யாவும் அப்பட்டமான பொய்யே என்பதிலும் சந்தேகமில்லை இன்னும் சிரிப்புக்குரிய பல செய்திகளை இவர்களே பத்திரிகைக்கு கொடுத்திருந்தாலும் அவற்றையெல்லாம் சுட்டிக் காட்ட நாம் விரும்பவில்லை. இவர்களது பொய்கள் புழுகுகளுக்கு நாம் பதில் எழுதுவதெனில் நாம் ஓர் புத்தகமே எழுதலாம். எனவே அவற்றை எல்லாம் இங்கே தவிர்த்துக் கொள்கின்ருேம்.

மட்டக்களப்பு சிறையுடைப்பு நடவடிக்கையை யார் மேற்கொண்டார்கள் என்பது உங்களுக்கு இப்பொழுது புரிந்திருக்கும். நாம் செய்த நடவடிக்கைக்கு நாம் உரிமை கொண்டாடுவது தவரு? மக்களே நீங்களே தீர்ப்பு கூறுங்கள்.

நாம் செய்யாத ஒரு நடவடிக்கைக்கு உரிமை கொண்டாட விரும்பி இருந்தால் ஆனைக்கோட்டை பொலீஸ் நிலையத்தை தாக்கியதையும், கிளிநொச்சி வங்கிக் கொள்ளையை நடாத்தியதையும் நாம் உரிமை கொண்டாடி இருப்போம். ஆனுல் செய்யவில்லை. ஏன்? எமக்கு பேரும் புகழும் முக்கியமல்ல. எமது நோக்கமெல்லாம் ஈழ விடுதலையே. செய்யாத ஒன்றை செய்ததாகக் கூறித்தான் தாம் இயக்கம் வளர்க்க வேண்டும் என்ற எந்த நிர்ப்பந்தமோ, அவசியமோ எமக்கில்லை. எமக்கென்று கொள்கைகள், இலட்சியங்கள் உண்டு, அதனடிப்படையில் மக்களை அணிதிரட்டும் வலுவும், திறனும் எமக்குண்டு, எனவே ஒட்டுண்ணிகள் மாதிரி நாம் யாரிலும் தங்கியிருந்து தான் எதையும் சாதிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் எமக்கில்லை. ஆனுல் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்

திற்கோ அப்படி ஏதாவது இருப்பதாகத் தோன்ற வில்லை. உண்மையிலேயே அவர்களைக் கண்டிக்க வேண்டியவர்கள் நாங்கள். ஆனால் இன்று அவர்கள் எம்மை மிரட்டுவதிலும், எமது தோழர்களைச் சித்திரவதை செய்வதிலும் இறங்கியுள்ளார்கள். இந்த அநாகரீகமான வேலைகளை எம்மாலும் செய்ய முடியாதென்பதல்ல. ஆனால் அநாகரீகமான வழிகளில் எமது இயக்கத்தை வளர்க்க நாங்கள் விரும்பவில்லை. எதிரிகள் யார் நண்பர்கள் யார் என்பதை நாம் நன்றாகவே புரிந்துவைத்துள்ளோம். எமது துப்பாக்கிகள் என்றும் எதிரிக்கெதிராகவே இருக்கும் என்பதில் உறுதியாக உள்ளோம். ஆனால் துப்பாக்கி தூக்கியவர்கள் எல்லாம் எல்லோரையும் சுடலாம், எல்லோரையும் மிரட்டலாம் என்ற நிலைப்பாட்டிற்கு இவர்கள் வந்திருப்பார்களாயின் இவர்களும் எமது எதிரிகளே.

எமது போராட்டமானது சிங்கள நவபாசிச அரசுக்கெதிராகவும், சுதந்திர ஈழதேசத்தை போராடிப் பெறுவதை நோக்கமாகக் கொண்டதே தவிர, இயக்கங்களுக்கிடையில் சுடுபட்டு இறப்பதை நோக்கமாகக் கொண்டதல்ல. ஆனால் விடுதலைக்காகப் போராடும் எமது தோழர்கள் இந்தநாளாந்தர குண்டர் கூட்டத்தால் சித்திரவதை செய்யப்பட்டும், அவர்களுடைய சைக்கில், மணிக்கூடு ஆகியவை பறிக்கப்பட்டும் மிரட்டப்படும்போது இவர்களை என்னசெய்வது? இவர்கள் உண்மையில் ஈழவிடுதலைக்காகப் போராடுகின்றார்களா? இவற்றுக்கெல்லாம் மக்களே நீங்கள் தான் தீர்ப்புக் கூறவேண்டும். இவர்களைச் சரியான முறையில் இனங்கண்டு இவர்களை ஒதுக்காதவரை இல்லையேல் சரியான முறையில் மக்களுக்கு அம்பலப்படுத்தாத வரை, இவர்கள் எமது தாயகமாம் ஈழதேச விடுதலைக்கு எதிரானவர்களாகவே இருப்பார்கள். இவர்கள் சுய நலங்களையும், பதவி ஆசைகளையும் கொண்ட பிற்போக்குவாதிகளே தவிர உண்மையான விடுதலைப் போராளிகள் அல்ல. எனவே எமது அன்பிற்கினிய ஈழதேச மக்களே இப்பிற்போக்கு கும்பலை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். எமது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைந்து ஈழ விடுதலைக்கு உங்கள் பங்களிப்பைச் செலுத்துங்கள்.

வெல்க ஈழ மக்கள் விடுதலைப் போராட்டம். வாழ்க ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி.

மக்கள் விடுதலைப் படை

---

## ஓ, சிறீலங்கா நவபாசிச வெறியர்களே!

நமது ஈழமும், நமது மக்களும்
மலையை விட உறுதியானவர்கள்.

மாகடலைவிட ஆழமான உணர்வுடையவர்கள். எமது கட்சியும், அதன் மக்கள் படையும் குருதியில் நனைந்த செங்கொடிகளை உயரே தூக்கி அணிவகுத்து வருகையில்,

ஓ., நவபாசிச வெறியர்களே!
உங்கள் கொலைக்கரங்கள் குலுக்கப்படாது—
**அறுக்கப்படும்!**

# காக்கையும் அணிலும்

'தேனூரான்'

தென்னங்கீற்று வேய்ந்த கூரை மீது அந்த அணில் பிள்ளை தாவி தாவி ஓடி நின்றது காய்ந்த கீற்றுக்குள்ளே தலையை விட்டு விட்டு வெளியே இழுக்கிறது.

இப்படி நான்கைந்திடத்தில் தலையை விட்டு விட்டு இழுத்திருக்கும். நான்காவது தரமோ, ஐந்தாவது தரமோ அது தன் தலையை உள்ளே விட்டு வெளியே இழுத்தபோது அதன் வாயில் ஏதோ இரை, வாலை ஆட்டிக் கொண்டு கூரையிலிருந்து முருங்கை மரத்திற்கு தாவி, பக்கத்து மாடி வீட்டில் ஏறி ஓடுகிறது.

தினந்தோறும் இந்த வேடிக்கை நடந்து கொண்டு தான் இருந்தது.

அன்றைக்கு—

அது, அந்த கூரை மீது விசுக் விசுக்கென்று ஓடி தென்னங் கீற்றுக்குள்ளே தலையை விட்டு கிடைத்த இரையுடன் தலையை வெளியே நீட்டிய போது எங்கிருந்தோ பறந்து வந்த காகம் அதைக் கொத்த நெருங்குகிறது.

முரடாக கன்னங்கரே என்றிருக்கிறது. தோற்றத்திற்கு தகுந்த மாதிரி குணமும் இருக்கிறது...

என்ன அக்கிரமம்!

சாதுவாக இருக்கின்ற, அந்த சின்னஞ்சிறு பிராணியை எருமை மாடு மாதிரி இருக்கிற அந்த காகம் கொத்தப் பார்க்கிறது— அதன் வாயில் இருக்கிற இரையை தட்டிப் பறிக்கத் துடிக்கிறது.

'சீ... எவ்வளவு மோசம்?

மெலிந்தவனை வலியவன் அடிக்கும் வேலை; எத்திப் பிழைக்கிற காலித்தனம். உழைக்கிறவன் உழைப்பை சும்மா இருப்பவன் சாப்பிடுகிற செயல்— சுரண்டல் தனம். சாப்பிட முடியாவிட்டால்— கிடைக்காவிட்டால் பலாத்காரம்— சண்டித்தனம்.

எத்துணை இழிவான குணம்!

கொத்த வந்த காக்கையிடமிருந்து தப்பி இன்னொரு பக்கம் ஓடிய அணில்—

கீச் கீச் சென்று கத்தியவாறு அந்த காக்கையை விரட்ட முயன்றது.

தன் இரையைத் தட்டிப் பறிக்க முயன்ற அதுக்கு கோபம் வராதா பின்னே?

கூரிய பற்கள் வெளியே தெரிய சீறுகிறது.

அவ்வளவு தான் அந்த முரட்டுக் காக்கை பின் வாங்கியவாறு பறந்தது. பாவம் அணிலும் அடுத்த கணம் முருங்கை மரத்தில் தாவி ஓடியே விட்டது.

இன்னொரு நாள்—

அந்த காக்கை பறந்து வந்து அந்த கூரை மீது அமர்கிறது. அதன் வாயில் இரை.

பின்— தாவி தாவி அந்த கூரைக் கீற்றில் அங்கும் மிங்கும் பார்த்து விட்டு ஓரிடத்தில் தன் சொண்டை திணித்து வெளியே இழுக்கிறது. சொண்டில் இரை இல்லை. உள்ளே வைத்துவிட்டது. பின் பறந்து விட்டது.

**இதென்ன கூத்து?**

கொஞ்ச நேரம் இருக்கும்— அந்த அணில் ஓடி வருகிறது.

வழக்கம் போல கூரையின் கீற்றில் தலேயை விட்டு விட்டு இழுக்கிறது. நான்கைந்து தரம் இருக்கும்—

அதன் வாயில் இரை. காக்கை வைத்த அதே இரை.

இதென்ன அக்கிரமம்!

அப்படியென்ருல்...? இத்தனே நாளும் அந்த அணில் கீற்றுக்குள் இருந்து எடுத்தெடுத்து தின்றது?

அதனுடைய இரை அல்ல அங்கும் இங்கும் பறந்து அலேந்து கொண்டு வந்து வைத்த காக்கையின் இரையைத்தான் அந்த அணில் திருடித் தின்றிருக்கிறது.

பார்ப்பதற்கு எவ்வளவு பாவமாக இருக்கிறது. சாதுவாக தெரிகிறது. முதுகிலே நாமம்— சீதையை தேடிப்போன இராமன் கடலேக் கடக்க இது உதவியதாம் நன்றிக் கடன் பட்ட ராமன் அதன் மேலே தடவினுராம் அது தான் இந்த நாமம் — இது பக்திமானுக — பண்புடையவனுக — அடுத்தவன் உழைப்புக்கு ஆசை படாதவனுக... எல்லாம் வேஷம். அமைதியும், அஹிம்சாத்தனமும் தோற்றத்தில் தான்.

இரையை வெளியே இழுத்தெடுத்து கணநேரம் இருக்காது.

அந்த காக்கை வந்துவிட்டது. அணிலேக் கண்டதும் இறக்கைகளே வேகமாக அடித்த வண்ணம் பறந்து வருகிறது.

'பறந்து பறந்து தேடி, கொண்டு வந்து வைக்கிற இரையையெல்லாம் அந்த அணில் திருடிக் கொண்டுப் போய் விடுகிறது. பறந்து திரிந்து தேடிய உழைப்புக்கு பலன் இல்லே; கைக்கு எட்டியது வாய்க்குக் கூட கிட்டவில்லே. என்ன கொடுமை?'

கோபம் குமுறிக் கொண்டு வருகிறது.

அணிலோ தன் வழக்கமான குரலில் சத்தம் போட்டு, கூரிய பல்லேக் காட்டி எதிர்க்கிறது.

அந்த வேளேயில் இன்னும் இரண்டு மூன்று காக்கைகள் வந்து விடுகின்றன—

எல்லாம் சேர்ந்து விட்டன.

அதற்கு மேல் அணில் தன் குரலேக் காட்டுவதாவது; கூரிய பல்லே நீட்டிபயமுறுத்துவதாவது; ஒன்ருய் வந்து தன்னே எதிர்க்கும் அந்த காக்கை கூட்டத்திற்கு பயந்து பதறித் துடிக்க ஓடியே போய்விடுகிறது.

O

OOOOOO

# சுட்டெரித்த ஜூலை ஆறு நாட்களில்...

OOOOOO

இலங்கையில் இந்த ஆண்டு ஜூலை ஆகஸ்ட்டில் நடந்த இனப் படுகொலைகள், கலவரங்களால் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டார்கள்.

இதற்கு முன் நடந்த கலவரங் களில் ஏற்படாத பாதிப்புகள் இந்த கலவரத்தில் ஏற்பட்டுள் ளது. கடந்த கலவரங்களை விட இந்த கலவரம் மாறுபட்ட வகை யில் நடந்துள்ளது.

எந்த கலவரத்திலும் நடக்காத வகையில் இந்த கலவரத்தில் இலங்கையின் தலைநகரமான கொழும்பு நகரமே பாதிக்கப்பட்டு விட்டது. இலட்சக்கணக்கான தமிழர்களின் வீடுகள், கடைகள் தொழில் நிலையங்கள் கொள்ளை அடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப் பட்டன; பலர் கொல்லப்பட்டார் கள். கொழும்பு நகரைப் போல இலங்கையின் மத்திய பகுதியி லுள்ள மலைநாட்டு நகர்களிலும் கடைகள், வியாபார நிலையங்கள் அனைத்தும் தீக்கிரையாக்கப் பட்டன.

ஸ்தாபன ரீதியாக திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்த இனக் கலவ ரத்தில் இலங்கையில் வாழும் இந்தியத் தமிழர்களே வெகுவாக பாதிப்புக்குள்ளானுர்கள்.

மலையகத்து நகரங்களில் மட்டு மல்ல; தோட்டங்களிலும் தமிழ் தொழிலாளர்களுடைய 'லயன்' கள் தீக்கிரை யாக்கப்பட்டது; உடமைகள் கொள்ளையடிக்கப் பட்டன; பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டார்கள்— இனி இந்த மண்ணில் சிங்கள மக்களோடு— உயிர் பயமின்றி வாழ முடியாது என்ற நிலைக்கு வரும் அளவில் இந்த இனக் கலவரத்தில் மலைய கத் தமிழ்மக்கள், இந்தியத் தமிழ் வியாபாரிகள் — தொழிலதிபர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த கலவரத்தில் கொழும்பு நகரில் அரசு துறையில் பணி செய்த பல தமிழ் உத்தியோகஸ் தர்களும் பாதிக்கப்பட்டு அகதி களாக தமிழ்ப் பிரதேசத்திற்கு அனுப்பப்-பட்டார்கள். இவர்களை இந்தியக் கப்பல்கள் யாழ்ப்பா ணத்திற்கு கொண்டு சென்றன.

மலையக நகரங்களிலும்— தோட் டங்களிலும் சிங்களக் காடையர் களே இனக்கலவரத்தையும் படு கொலையையும் நடத்தினர்; அவர் களுக்கு போலீஸாரும் ராணுவமும் துணை நின்றிருக்கிறது.

தமிழ்ப் பிரதேசத்தைப் பொறுத்தவரை இராணுவத் தினரே முழுக்கமுழுக்க இனக் கொலைகளில் ஈடுப்பட்டனர்.

தமிழ் பிரதேசமான ஈழப்பகுதியி லும் மலையகத்திலும், கொழும்பு நகரிலும், அதைச் சுற்றிய பகுதி யிலும் நடந்த இந்த இனப்படு கொலையில் — இனக்கலவரத்தில் எவ்வளவு பேர் மாண்டார்கள் எவ்வளவு பேர் தமது உடமை களை இழந்தார்கள்? எவ்வளவு பேர்களுடைய வீடுகள், கட்டிடங் கள், கடைகள், வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன? எவ்வ ளவு பேர் எதிரிகளாகி இருக்கிறுர் கள்? — இன்னும் இந்த விபரங் கள் சரிவர தெரியவில்லை.

இலங்கை அரசும், அரசு நிறுவ னங்களும் தந்துள்ள புள்ளிவிபரங்

கள் திருப்தியளிப்பதாக, சரியான தாக இல்லை. முன்னுக்குப் பின் முரணாக, போதுமான தகவலை தருவதாக இல்லை.

25-8-83 அரசிறை இதழ் 'ஹேன்சாட்'டில் இலங்கை பிரதமமந்திரி தரும் தகவல்.

கொலைகள் 323; தீ வைப்பு 1494; கொள்ளை 195; கற்பழிப்பு போன்ற சம்பவங்கள் 372. அகதிகளாக முகாம்களில் சேர்க்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 80,000 ஆகும்.

31-8-83 'சன்' பத்திரிகையில் இலங்கையின் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா தரும் தகவல்;

கொலை 385, வீடிழந்தவர்கள் 100,000 ஆகும்.

மலையகத்தில் தேயிலை, ரப்பர் தோட்டங்களை நிர்வகித்து வருகின்ற மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையும் பெருந் தோட்ட கூட்டுஸ்தாபனமும் தத்தமது விபரங்களை கொடுத்துள்ளன.

'மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை' தந்துள்ள விபரம்.

தோட்ட உத்தியோகத்தர் வீடுகள் சேதம் 78; தொழிலாளர் லயன்கள் 1 64 கொல்லப்பட்டவர்கள் 8, காயப்பட்டவர்கள் 48, பாதிக்கப்பட்டவர்கள் 10,812 பேர் ஆகும்.

பெருந்ததோட்ட கூட்டுதாபனம் தந்த விபரம்.

பாதிக்கப்பட்டவர்கள் 6,250 பேர் என்பது மட்டுமே.

23.7.83, 27.5.83 ஆகியதேதிகளில் வெலிக்கடைச் சிறையில் இருந்த 54 தமிழ்க்கைதிகள், சிங்கள இன வெறியர்களால் கொல்லப்பட்டனர்.

சென்னை, ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய (இபிஐசி)த்தின் யாழ்ப்பாணத்தில் 60 பேரும் தகவல்படி திருமலையில் 469 பேரும் ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கிறார்கள்-இது திருக்கோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இருபகுதிகளில் மாத்திரம் கிடைக்கப் பட்ட தகவல்கள்; இதுவும் கிடைத்தவரை உள்ள தகவல்களே மற்ற பகுதிகளிலும் இராணுவத்தால் நடந்த கொலைகள் பற்றிய விவரம் கிடைக்க வில்லை.

மலைநாட்டில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் எவ்வளவு என்பது இன்னும் வெளிவரவில்லை. மலையகத்தில் பொதுப்பணியில் ஈடுபட்டு சேவையாற்றி வரும் 'ஆதவன்' தாம் செய்த ஆய்வுப்படி சில தகவல்களை அனுப்பியுள்ளார். அவரும் மலையகத்தின் மிகச் சில பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய தகவல்கள் மட்டுமே அனுப்பி உதவியிருக்கிறார். மலையகத்தின் மத்தியப் பகுதியில் இருக்கும் நுவரெலியா நகருக்கும், அதற்கு தென் கிழக்கே இருக்கும் பதுளைக்கும் இடையிலுள்ள பதுளை, வெளிமடை, பசறை, லுனுகெல, ஹாலிஎல, பண்டாரவளை, அப்புத்தளை, பெரகல ஜங்சன், கலுதுமுள்ள, ஆலடி தென்ன, மொனராகலை, நுவரெலியா, கந்தபொல, மற்றும் எட்டியாந் தோட்ட, புலத்ஹோ பிட்டிய ஆகிய நகர்களே அந்த சில பகுதிகள்.

அவர் தந்துள்ள தகவல்படி, தீக்கிரையாக்கப்பட்ட அல்லது

Appropriate Technology Services
21, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.



சேதப்படுத்தப்பட்ட வீடுகள் 43( ; கடைகள் 653; பள்ளிக் கூடங்கள் 3; கோவில்கள் 5; அச்சகங்கள் 5; தியேட்டர்கள் 3, வங்கி 1; வாகனங்கள் 135; 16 வீடுகள் கொள்ளை அடிக்கப் பட்டு தீக்கிரையாக்கப் பட்டன. பதுளையிலும் நுவரெலியாவிலும் அகதிகளானோர் 9,952 பேர்கள்.

தமிழர்களுக்கு சொந்தமான கடைகளுக்கு பக்கத்திலிருந்த சில சிங்கள கடைகளும், முஸ்லிம் கடைகள் கூட தீக்கிரையானது இங்கே குறிப்பிடத்தக்கது.

திரு. ஆதவனின் தகவல்படி மேற்படி நகரப்புறத்தைச் சார்ந்த 27 தோட்டங்களில் மட்டும் 82 லயங்கள் (தொழிலாளர் குடியிருப்புகள்) தீக்கிரையாக்கப் பட்டன; 27 லயங்கள் என்று சொல்லும் போது 1 லயத்தில் சுமார் 16 வீடுகள் (காம்பராக்கள்) இருக்கும். ஆக 1312 வீடுகளாகும். இவற்றுள்ள 4 லயங்கள் கொள்ளை அடிக்கப் பட்டு தீ வைக்கப்பட்டன. மேலும் 4 லயங்கள் கொள்ளை மட்டும் அடிக்கப்பட்டன. 1 உத்தியோகத்தவர்வீடு தீ வைக்கப்பட்டது; 7 உத்தியோகத்தவர்கள் வீடு கொள்ளையடிக்கப்பட்டன.

பதுளைப்பகுதியிலுள்ள லெஜர் வத்தையில் ஏற்பட்ட பாதிப்புகள் அறிய முடிய வில்லை.

தோட்டங்களில் நடந்த கொலைகள் பற்றி விவரம் சரியாக அறிந்துக் கொள்ள முடியவில்லை கலவரத்தின் போது கொழும்பிலிருந்து மலையகம் நோக்கி சென்ற மலையகத்தமிழர் இளைஞர்கள் - உத்தியோகத்தவர்கள் பலர் பயணம் செய்த போதே கொல்லப் பட்டார்கள்-வீடுகளில், பஸ்வண்டிகளில் வாகனங்களில், ரயில்களில் என்று கண்ட இடங்களிலெல்லாம் தமிழ் மக்கள் வெட்டிக் குத்தி கொலை செய்யப் பட்டார்கள்—தீயிட்டு கொளுத்தப் பட்டார்கள்.

இப்படி செய்யப்பட்ட கொலைகள் கிட்டத்தட்ட 4000க்கு மேல். என்று மலையகத்திலிருந்து வந்த ஒரு பிரமுகர் தெரிவிக்கிறார்.

—டேயெஸ்ஸார்

---

# போராடுவோம், முன்னேறுவோம்!

நாங்கள் போராடுவோம் கடந்த காலத்தில் எமக்காகவும், தமக்காகவும் போராடிய போராளிகளது கனவுகளை நிஜமாக்க நாங்கள் போராடுவோம். எமது நிலையான, எழிலார்ந்த வாழ்வுக்கும், எமது எதிர்கால தலைமுறையின் சுபீட்சத்துக்குமாக நாங்கள் போராடுவோம்.

சிறையிலும், தெருவிலும், வீடுகளிலும் ஆக்கிரமிப்பாளனது படுகொலைப்படைகள் நாசங்களை உண்டாக்கும் போது, எமக்கென உள்ள மக்கள் படையில் இணைந்து படுகொலைவாதிகளை அழிக்க சமர் புரிவோம்.

அடக்குமுறைகள், ஆக்கிரமிப்புக்களை எதிர்த்து விடாப்பிடியாக போரிடும் எமது சர்வதேச தோழர்களுக்கு எங்கள் புரட்சிகர ஆதரவை வழங்குவோம்.

நாங்கள் முன்னேறுவோம்! புரட்சிகர தலைமையின் மகத்தான வெகுஜனப்படைப் பகுதிகளில் மக்களை அணிதிரட்டி, அதன் மக்கள் விடுதலைப்படையை பலமாக்கி எதிரியை ஒழிக்க முன்னேறுவோம்!

# செம்பொறிகள்!

மீண்டும் ஒரு விரிவுரையாளர்
மீண்டும் எமது தோழர்கள்
மீண்டும் ஒரு மதகுரு
மீண்டும் ஒரு ஈழதேச குடிமகன்
மீண்டும், மீண்டும்
சிறைவாசம் சித்திரவதை!
அன்றொரு காலம் கழிந்தது
வேள்விக்கடாய்களாய் எங்கள் தோழர்கள் தொலைந்தது

இன்று நாங்கள்,
வேள்வி நடத்தும் வீரர்கள் ஆகினோம்!
அடக்குமுறைக் சிறைக்
கூண்டைத் தகர்க்கப் புறப்பட்டோம்!
நீண்ட நெடும் பயணத்தில்
தோழர் குழாமோடு கைகோர்த்து வாருங்கள்!
எங்கள் மரணம்
இழப்பல்ல!
விடுதலைப் பயிரின் செழிப்புக்காய்
இடப்படும் உரமே!
தேச விடுதலைப் படத்தை வரையும்
புரட்சிப் பேனாவுக்கு
குருதியைக் கொடுக்கும்
கூட்டம் நாங்கள்!

''பேச்சுவார்த்தை'' முகமூடி கிழிந்தது
தேர்தல் நாடக வேடம் கலைந்தது—உயர்
வர்க்கத் தலைமை
காட்டிக் கொடுத்தது!
காக்கிச் சட்டைக்

காட்டு மிராண்டிகளின்
குருதி வெறியின் முன்
குதிக்கிறோம் நாங்கள்
எங்கள் பாச பூமியை
ஈழ தேசத்தை
நாசம் செய்யும்
அரசு எந்திர அரக்கரின் முன்னால்
ஆளுமையோடு குதிக்கிறோம் நாங்கள்!
ஈழமக்களே! ஈழ மக்களே!
தோழர் குழாமோடு
கைகோர்த்து வாருங்கள்!
எங்கள் விலங்கை
உடைக்கும் பொறுப்பை
நாங்களே எடுப்போம்!

எங்கள் தாயக
புரட்சி நெருப்பை
நாங்களே எரிப்போம்
நீண்ட நெடும் பயணத்தில்
ஈழ மக்களே ஈழ மக்களே
தோழர் குழாமோடு
கைகோர்த்து வாருங்கள்!

குருதி வெள்ளம் ஓடிய பின்தான்
ஈழமண்ணில் விடுதலை பூக்கும்!
உறுதியோடு போராடினால் தான்
இறுதி வெற்றி நமக்குக் கிடைக்கும்!
சுமந்த விலங்கை சிதற உடைப்போம்
சிவந்த விடியல் பிறக்க உழைப்போம்......!

—தோழன்

குறுநாவல்

# இரவல் தாய் நாடு

செ. யோகநாதன்

(முன் இதழ் தொடர்ச்சி)

"நேற்று இரவு யாரோ எங்களின் பள்ளிக்கூட மதிற்சுவர்களிலே 'ஆயுதப்படையினரே உங்கள் கொலைகாரத்தனமான அட்டூழியங்களை நிறுத்திவிட்டுத் திரும்பிப் போங்கள்' என்று எழுதிவிட்டார்கள். காலையிலே பெரியதொரு ராணவப் படையே பள்ளிக்கூடத்திற்கு வந்திட்டுது. ராணுவ அதிகாரி, பள்ளிக்கூட மாணவர்களைக் கொண்டு இந்த சுலோகங்களையெல்லாம் உடனடியாக அழித்துவிடச் சொன்ன போது பிரின்ஸிபல் அதற்கு மறுப்புச் சொல்லிவிட்டார். இராணுவத்தினருக்கு இதனலை அளவுக்கு மீறின ஆத்திரம், பிரின்ஸிபலை மிரட்டிப் பார்த்திருக்கிருர்கள். அவர் அசையவில்லை... ஒன்றும் செய்ய வழியில்லாத இராணவம் வீதியாலே அப்போது போய்க்கொண்டிருந்த சில இளைஞர்களைத் தடுத்தி நிறுத்தி, துப்பாக்கி முனையில் அவர்களை வைத்து அந்த சுலோகங்களை அழித்திருக்கிருர்கள். பிரின்ஸ்பலை இரவு வீட்டில் வந்து சந்திக்கிறதாக அந்த ராணுவ அதிகாரி சொல்லி விட்டுப் போயிருக்கிருன்."

ஜெயகுமாரின் முகத்திலே கவலைபடர்ந்தது.

"அந்த ஆளுக்கு இராணுவம் ஒரு தீங்கும் செய்யாதோ?"

கவலை படர்ந்திருந்த சிவாவின் முகத்திலே லேசான புன்னகை மெல்லிய ஒளியினை மலர்த்திற்று.

"அவர் இன்றைக்கு தன்னுடைய வீட்டிலே தங்கமாட்டார். நாங்கள் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறம் அவர் ஒரு தனியாள் ஆனபடியாலை பிரச்சனைகளும் குறைவானவர்..."

ஜெயகுமார் அருளைப்பற்றி கவலையோடு விசாரித்தார். செல்வராசாவின் விஷயமாக அமைச்சரைச் சந்திக்கச் சென்றிருக்கிற அருள் எவ்வித பிரச்னையுமில்லாமல் திரும்பி வந்துவிட வேண்டுமென்பதே எங்களின் மனத்துடிப்பாயிருந்தது. அருள் நியாயத்திற்காக எதையும் செய்யக் கூடியவன். நியாயத்தை வாதாடினுல் சில வேளைகளில்

அதுவே தண்டனைக்குரிய குற்றம் என்று அரசாங்க சட்டங்களும் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன.

"பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் என்றதைத் தெரியாமல் இவர் நியாயமொன்றையே துணையென்று கருதிப் போயிருக்கிறார். எப்படியோ முயற்சி செய்து செல்வராசா வெளியிலே வந் ஈல் அதுவே பெரிய காரியம், அப்பிடியே நடக்கவும் வேணும்..."

சிவா தேநீர்க் கோப்பைகளை எடுத்துக்கொண்டுபோய் உள்ளே வைத்து விட்டு வந்து துவாலையையும், சோப் பெட்டியையும் முருகேசுவின் கையிலே கொடுத்தாள்.

'நீதி ஒன்று கிடைக்கவேண்டுமென்றுதான் அருள் இவ்வளவு பாடுபடுகிறான். எனக்குப் நம்பிக்கையிருக்குது. அருள் நன்றாக யோசிக்காமல் இந்த முடிவுக்கு வந்திருக்கமாட்டான்... எப்பிடியும் முயற்சித்து அவன் செல்வராசாவை விடுவித்தே தீருவான். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காமல் போய் முகத்தைக் கழுவிவிட்டு வாருங்கள்..."

இருவரும் கிணற்றடிக்குச் சென்றனர். ஆஜானுபாகுவான முருகேசு தளர்ந்த நடையுடன் போவதைப்பார்க்கையில்எனது மனம் கலங்கியது. சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் வீதியிலே அடிக்கடி ஜீப் வண்டிகள் ஓடிய வாறிருப்பதை அவதானிக்க முடிந்தது. பயங்கரமானதொரு பரபரப்பு இருட்திரையினைப் போல அவ்விடமெல்லாம் கவிந்து பரவிக் கொண்டிருப்பதனை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

"1971-ம் ஆண்டிலே நான் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது இதே போலத்தான் சூழ்நிலையிருந்தது. நாளாந்தம் அங்கிருந்த மாணவ மாணவிகளை சேகுவெரா பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி மிகக் கொடூரமாக நையப்புடைத்து அழைத்துச் சென்றதனை நான் என்னுடைய கண்களாலேயே கண்டேன். எவ்வளவு பேர் அநியாயமாக..." ஜெயகுமார், முருகேசுவைப் பார்த்துவிட்டு சிவாவுக்கு கண்ஜாடை செய்தார்; பின்னர் தானே தொடங்கினார்:

"அதுவும் இதுவும் ஒப்பிடத்தக்கதில்லை. பொலிசினுடைய அட்டூழியங்களைப் பொறுக்கமுடியாமலும், சமுதாய விடுதலையினை மேற்கொண்டு அரசியல் மாற்றத்தை சாத்தியப்படுத்த நினைத்து, சரியான கொள்கையும், ஒரே தலைமையும், வெகு ஜனங்களின் ஒத்

துழைப்புமில்லாமலும் நடத்தப்பட்ட ஒரு அட்வென்சரிஸப் போராட்டம் அது... அதின் தோற்றத்திலேயே தோல்வியுமிருந்தது... ஆனுல் இது சூதுவாதற்ற அப்பாவிகளுக்கு பயங்கரவாதிகள் என்ற பட்டம் சூட்டி நடத்துகிற இழிவான மனிதவேட்டை... நீதிக்குப் புறம்பான கொடூர அடக்குமுறை...''

ஜெயகுமார் சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்தார்.

''நன்ருக யோசித்துப் பார்க்கிறபோது தமிழராய்ப் பிறந்த ஒரு காரணத்திற்காகவே இப்படி வதைபட வேண்டியிருக்கிறது...''

''நீங்கள் சொல்லுறது முற்றிலுஞ் சரி. ஒருவித காரணமுமில்லாமல் பொலிசாலும், ராணுவத்தாலும் பொதுமக்கள் தாக்கப்படுகிறது சாதாரண விஷயமாய்ப் போச்சுது... எந்த இடத்திலே களவு நடந்தாலும், அதை எல்லாத் தமிழருமே சேர்ந்து செய்த மாதிரி எல்லோருக்குமே தொந்தரவு... இதே போல சிங்களப் பிரதேசத்தில் ஏதாவது சம்பவங்கள் நடந்தால், இத்தகைய வழிமுறைகளைப் பொலிசார் கையாளுகிருர்களா?...இல்லையே...''

சிவாவின் தணிவான குரலிலிருந்த ஆதங்கமும், கவலையும் உண்மையானவை. நகரத்தில் அவள் பயிற்றுவிக்கிற கல்லூரியிலே பல மாணவர்கள் அநியாயமாகத் தாக்குதல்களுக்குள்ளாகி, படிப்பிணையும் இழந்து நிர்க்கதியாகிவிட்ட சம்பவங்களை அவள் எனக்கு சோகம் சுமந்த குரலிலே அடிக்கடி கூறியிருக்கின்ருள், திறமையிருந்தும், அரசாங்கத்தின் கல்விக் கொள்கையினுல் பல்கலைக் கழகம் செல்கின்ற வாய்ப்பினை இழந்த பல மாணவர்கள்அவளிடம் வந்து தங்கள் பிரச்சனைகளைக்கூறி, அவளது ஆறுதல் வார்த்தைகளினுல் மனந்தேறி வீடு செல்வார்கள்.

''1961-ம் ஆண்டிலே தமிழரசுக் கட்சியின் தலைமையில் தமிழ் மக்கள் செய்த சத்தியாக்கிரகத்தை அடக்கி நசுக்குவதற்காக, . யாழ்ப்பாணத்திற்கும் ஏனைய பகுதிகளுக்கும் இராணுவம் அனுப்பப்பட்டது. அங்கிருந்த பொலிஸ் படை மேலும் உறுதியாகப் பலப்படுத்தப்பட்டது. அன்றையிலையிருந்து தமிழ்ப் பிரதேசத்திலே, குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலே ஒரு பொலிஸ் ராச்சியம் நிர்வாகத்திற்குச் சமாந்தரமாக இயங்கத் தொடங்கியது. யுத்தத்திலே கைப்பற்றப்பட்ட ஒரு பகுதியிலே நடந்து கொள்வதைப் போல இந்த ஆயுதப்படையினர் இயங்கி வந்திருக்கின்றனர். முப்படைகளிலும் தமிழர்களைச் சேர்த்துக் கொள்வது வெகுவாகக் குறைக்கப்பட்டதாலே தமிழ்ப் பிரதேசங்களிலே பெருந்தொகையான சிங்களப் பொலிசாரே கடமைக்காக நியமிக்கப்பட்டனர்...''

ஜெயகுமார் சில கணங்கள் மௌனமாகி விட்டுத் தொடர்ந்தார்:

"தமிழ்ப் பிரதேசங்களிலே ஆயுதப்படையினருக்கும், பொது மக்களுக்குமிடையில் இப்படி முரண்பாடுகள் தோன்றினதற்கு எந்தத்தனி மனிதனும் காரணமில்லை...1961-ம் ஆண்டிலிருந்து தமிழ்ப் பேசும் மக்களுக்கெதிரான அரசியற்சூழ்நிலை, தமிழ்ப் பேசும் மக்களை அடக்கி வைத்திருப்பதே தமது கடமையென இராணுவத்தையும், பொலிசையும் யோசிக்க வைத்தது. இந்த இனவாத உணர்வோடு சமூக பண்பாட்டுக் காரணங்களும் சேர்ந்து கொண்டன... தமிழ் மக்களுடைய பாஷை சிங்கள ஆயுதப்படையினருக்குத் தெரியாமலிருந்தது. தமிழ்ப் பிரதேசத்திற்கு மாற்றலாகி வருகிற பொலிசார், இது தங்களுக்கு தண்டனை இடங்கள் என எண்ணினர். இந்த ஆத்திரத்தோடு வந்த இவர்களுக்கு, அதனைத் தீர்த்துக் கொள்ளக் கிடைத்த ஒரே வழி கையிலே வாய்ப்பாக அகப்பட்ட தமிழனை அடித்துத் துன்புறுத்துவதுதான்...இதனை அவர்கள் பெரிய உத்தியோகம் பார்க்கிற தமிழனிலிருந்து சாதாரணமானவன் வரைக்கும் வெகு தாராளமாகவே கையாண்டனர்... இதற்கு எதிராக அரசாங்கம் நட வடிக்கை எடுக்காமல் கையை கட்டிக் கொண்டு பாராமுகமாயிருந்தது இவர்களுக்கு மேலும் உற்சாகத்தினையே அளித்தது. 1970 களிலிருந்து தமிழ்ப் பகுதிகளில் அரசியல் பலாத்காரம் பரவிவந்தது. பொலிசார் இதற்கெதிராக தாம் நினைத்த எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். 'பயங்கரவாதிகள்' என அழைக்கப்பட்டு வந்தவர்களைக் கைது செய்து விசாரணையின் முன் நிறுத்துவதற்குப் பதிலாக பொலிசாரே பொதுமக்களின்மீது பயங்கர வாதத்தினை மேற்கொண்டு அட்டூழியம் புரிகிறார்கள். தங்கள் விருப்பு வெறுப்புகளுக்கேற்ற வகையில் அப்பாவிகளைக் கைது செய்து குரூரமாக வதைக்கிறார்கள்... செல்வராசாவும் அந்த விதத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறான்."

ஜெயகுமார் திறந்திருந்த கதவினூடாக, கட்டிலில் அசந்துபோய் தூங்குகிற முருகேசுவையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தார். எதையுமே பேசாமல், சித்தப் பிரமையுற்றுப்போன மனிதனைப்போல இயங்குகிற இம்மனிதருக்கு எவ்விதத்திலாயினும் நிவாரணம் கிடைத்துவிட வேண்டுமென ஏங்கிற்று அவரது மனம்.

(தொடரும்)

# இன்றைய நிலையில் பேச்சுவார்த்தைகள்

இனப்படுகொலைகள், கொள்ளைகள், தீ வைப்புகள, கற்பழிப்புகள், இவற்றையெல்லாம் நடாத்தி முடித்த பின்பு இன்று பேச்சு வார்த்தைகள். பேச்சு வார்த்தை கூட ஜே. ஆர் அரசு விரும்பிய ஒன்றல்ல. இந்திய அரசின் வற்புறுத்தலாலும், வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ந்து வரவேண்டும் என்ற காரணத்திற்காகவும் மாத்திரமே ஜே. ஆர் ஜயவர்த்தன பேச்சு வார்த்தைக்குச் சம்மதித்துள்ளார். இது கூட பல மாதங்களாக இழுத்தடிக்கப்பட்டு, இறுதியாக கிறேனடா என்ற ஒரு சிறிய நாட்டின் மீது அமெரிக்கா படையெடுத்து அதனை ஆக்கிரமித்துக் கொண்டதும், இதே பாணியை இந்தியாபின் பற்றினாலும் பின்பற்றலாம் என்ற அச்சத்தின் வெளிப்பாடே ஜே. ஆர் இன்று பேச்சு வார்த்தைக்கு ஒத்துக் கொண்டதற்குக் காரணமாகும். ஜே. ஆர். ஜயவர்த்தன கொழும்பில் ஒரு கூட்டத்தில் பேசும் போது பேச்சு வார்த்தையை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளா விட்டால் மிகவும் பாரதூரமான பின்விளைவுகள் ஏற்படும் என்று அவர் மறைமுகமாக குறிப்பிட்டதிலிருந்து இதை நாம் புரிந்து கொள்ளலாம்.

அனைத்து இயக்கங்களும் ‘‘ஈழம்’’ என்ற முடிவை விட்டுக் கொடுக்கும் படியான பேச்சு வார்த்தைகளை நிராகரிக்கின்ற அதே சமயம் தமிழர் விடுதலைக் கூட்டணியானது பேச்சு வார்த்தைக்கு சம்மதம் தெரிவித்து அதனடிப்படையில் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டு வருகின்றது. ஜே. ஆர். ஜயவர்த்தனவும் அவரது சகாக்களும் மிக உறுதியாக ஈழக் கோரிக்கையை எதிர்த்து வருகின்றார்கள் அவர்களைப் பொறுத்தவரை ஒரு சில சலுகைகளை கொடுக்கலாமா என்று தான் சிந்திக்கின்றார்கள். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை மிக மிகக் கீழே இறங்கி வந்து ஜே. ஆரின் சலுகைகளில் ஏதாவது விசேடமாக உள்ளதா என்று பேச்சு வார்த்தை நடாத்துகின்றார்கள். ஜே. ஆர். அரசில் மந்திரியாக இருக்கும் தொழிலாளத் தலைவர் என தன்னைக் கூறிக்கொள்ளும் தொண்டமானும் இப்பேச்சு வார்த்தைக்கு முட்டுக் கொடுக்கின்றார்.

சுதந்திரத்தை கேட்டுப் பெற்றதாக உலக வரலாறு இல்லை. போராட்டங்கள், தியாகங்களின் மூலம்தான் ஓர் முழுமையான விடுதலையை அடைய முடியும்; ஆனால் சுதந்திரம், விடுதலை என்ற பெரியதொரு கோசத்தை முன்வைத்து பாராளுமன்றக் கதிரைகளை கைப்பற்றிய தமிழர் விடுதலைக் கூடடணியோ, இன்று முதலாளித்துவ தலைமையுடன் சலுகைகளுக்காக பேச்சு வார்த்தை நடாத்துகின்றது. இவர்களுக்கு ஆதரவாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும்(உமா தலைமை) செயற்படுவதாகத் தெரியவருகின்றது. இது சம்பந்தமாக உமாமகேஸ்வரன், தொண்டமானுடன் பேசியதாக தொண்டமான் கொழும்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். ஈழம் தவிர்த்த மாற்றுத்திட்டத்தை உமாமகேஸ்வரனும் ஏற்றுக்கொள்ளத் தயாராய் உள்ளார் என்று தொண்டமான் அறிக்கை விட்டும், இதுவரை மறுப்பறிக்கைவிடாமல் மௌன

மாக இருப்பது, உமாமகேஸ்வரன் குழுவினரும் இத்திட்டத்தை ஏற்றுள்ளதையே காட்டுகின்றது.

ஜே.ஆர். உடன்பாட்டுக்கு வர விரும்புவது மாவட்ட அபிவிருத்தி சபைகளில் இருந்து சிறிது வேறுபட்ட தீர்மானங்களின் அடிப்படையிலேயே என்பதை மறுப்பதற்கில்லை. இதுவரை மாவட்ட அபிவிருத்திச் சபை என்று இருந்து வந்த நிலை மாறி இனி மாகாணங்கள் மட்டத்திலான அமைப்புகளை உருவாக்குவதற்கான யோசனைகளாகவே ஜே.ஆரின் தீர்மானங்கள் உள்ளன. ஆனால் இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதெல்லாம் சிந்தனைக்கு அப்பாற்பட்டது. ஏனெனில் இதுவரை தமிழ்பேசும் மக்களுக்கென இருந்துவந்த சில சலுகைகளே அமுல் படுத்தப்பட முடியாத நிலைதான் உள்ளதே தவிர வேறொன்றும் இல்லை. இந்நிலையில் ஜே. ஆர். ஜயவர்த்தனவின் புதிய யோசனைகள் சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது கேள்விக்குரியதே. இவை தவிர ஏற்றுக்கொள்ளப்படும் எந்த முடிவுகளும் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்பட்டு அதில் அதிகப்படியான வாக்குகள் கிடைத்தாலே இவை நடைமுறைப்படுத்தப்படும். இது எவ்வளவு தூரம் சாத்தியமானது? இங்கே நாம் கேட்கும் கேள்வி ஒன்றே ஒன்றுதான். எமது தலைவிதியை நிர்ணயிப்பதற்குசிங்கள மக்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தது? எங்களது எதிர்காலத்தை நிர்ணயிக்க எங்களுக்குத்தான் அதிகாரம் உண்டே தவிர வேறு யாருக்கும் உரிமை கிடையாது.

அடுத்து, மிக முக்கியமாக ஆராயப்பட வேண்டியது

---

தேசிய இனங்களின், மொழிகளின் சமத்துவத்தை அங்கீகரிக்காத அதற்காக போராட எவரும் எல்லாவித சமத்துவமின்மையையும் எதிர்த்துப் போராடாத எவரும் மாக்சீய வாதி அல்ல ஜனநாயகவாதியுங்கூட அல்ல.

**-லெனின்**

---

என்னவெனில் திருகோணமலைத் துறைமுகத்தின் நிலைமை. இது சிறீலங்கா அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்குமாம். தமிழ்மக்களின் பாரம்பரியப் பிரதேசமும், வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் பாலமாக அமைந்திருப்பது இத் திருக்கோணமலையே. ஏற்கனவே அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் திருகோணமலை முழுச் சிங்களப் பூமியாக மாறி வருகின்றது. இந்நிலையில் திருகோணமலை தொடர்ந்து சிறீலங்கா அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்குமென்றால் அதன் கருத்து அங்குள்ள அத்தனை தமிழர்களும் விரட்டி அடிக்கப்படுவார்கள் என்பதே. இவை மாத்திரமல்ல. இந்து மகா சமுத்திரத்தின் முக்கிய இராணுவ கேந்திர நிலையமாக திருகோணமலையை மாற்ற அமெரிக்கா முழு முயற்சி செய்து வருகின்றது. இந்நிலையில் இது தமிழ் மக்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தால் நிச்சயமாக அது அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு பலத்த அடியாக இருக்கும். அத்துடன் சிங்கள மக்களை அரசு குடியேற்றுவதிலும் கூட சில சிக்கல்கள் ஏற்படும். இவை எல்லாவற்றையும் புரிந்துகொண்டுதான்

ஜே. ஆர். திருமலைத் துறைமுகம் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்குமென்று கூறுகிறுர். ஆரம்பத்தில் திருமலைத் துறைமுக மென்று கூறப்படுவது பின்னர் அதைச் சுற்றியுள்ள நிலப் பிரதே சத்தையும் அடக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. நிலமை கள் இப்படி இருக்கும்போது இங்கு பேச்சு வார்த்தைக்கான அவசி யம் என்ன தோன்றியுள்ளது.

ஜே. ஆர். ஜயவர்த்தனு தன் னைப் பலப்படுத்திக் கொள்ளவும், தனது சர்வாதிகாரத்தை நிலை நிறுத்திக்கொள்ளவும் தான் இந்த ஏற்பாடே தவிர, தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற் காக அல்ல என்பதே உண்மை. இவற்றை புரிந்துகொண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதனுடன் இணைந்த இயக்கங் களும் தமிழ்பேசும் மக்களை பக டைக் காய்களாக வைத்து பேரம் பேசி வருகின்றுர்கள்.

இது இவ்வாறிருக்க, இன்று ஈழ விடுதலைக்காகப் போராடும் இயக் கங்களை ஒன்றிணைப்பதில் பலதனி நபர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஒற்றுமைபற்றி பேசிக்கொள்ளும் சிலரைப்பற்றியும் இங்கு குறிப்பிட் டுத்தான் ஆகவேண்டும். இவர் களில் பெரும்பாலோர் தம்மை எந்த ஒரு இயக்கத்திலும் சாராத பொது மனிதர்களாகக் கூறிக் கொள்கின்றுர்கள். ஆனுல் இவர் களது பின்னணியை நாம் ஆராய ந்து பார்த்தால் இவர்கள் குறிப் பிட்ட சில இயக்கங்களை வறட் டுத்தனமாகப் பின்பற்றுவதை நரம் கண்டுகொள்ளலாம். இந்த மனிதர்கள் உண்மையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு பதிலாக, அவர்களது நடவடிக் கையானது இயக்கங்களிடையில் ஏற்கனவே இருக்கக்கூடிய ஒரு சில புரிந்துணர்வுகளையும் கூட சீர்குலைப்பதிலேயே சென்று முடி கிறது. ஒற்றுமை என்று பேசிக் கொள்ளும் இவர்கள் அதில் பங்கு பற்றும் குறிக்கப்பட்ட சில இயக் கங்களுக்கெதிராகவே பொய்ப் பிரச்சாரம் செய்வதில் ஈடுபடுவ துடன், குறிக்கப்பட்ட ஒருசில இயக்கங்களுக்கெதிராக இவர்கள் மற்ற இயக்கங்களை திரட்ட முயற் சிக்கிறுர்கள். அத்துடன் எந்த இயக்கங்களுக்கிடையில் தனிப் பட்ட கூட்டு ஏற்பட்டால் அது அவர்களுக்கு தனிப்பட்ட முறை யில் இலாபத்தை கொடுக்குமோ அத்தகைய இயக்கங்களை ஒன்று திரட்டுவதிலேயே அவர்கள் ஈடு படுவதையும் காணக்கூடியதாய் உள்ளது.

உண்மையில் ஈழ விடுதலையில் ஆர்வம் கொண்டு இம்முயற்சியில் ஈடுபடுகின்றுர்களா என்றுல் இல்லை என்றே கூறலாம். இயக் கங்களுக்கிடையில் உள்ள கருத்து வேறுபாடுகள், முரண் பாடுகள், பிரச்சனைகள் என்ப வற்றை கணக்கிலெடுக்காமல், தமது சொந்தசுயநலங்கள்விருப்பு வெறுப்புகளுக் கேற்பவே இவை நடைமுறைப் படுத்தப் படு கின்றன. இயக்கங்களுக்கிடை யில் இருப்பது வெறும் தலைமைப் போட்டி என்பது போலவும், வேறெந்தப் பிரச்சனைகளுமில்லை என்பது போலவும், கூட சில நபர்கள் பேசிக் கொள்கின்றுர்கள்.

ஒரு சில இயக்கங்களுக்கிடை யில் தலைமைப் போட்டி என்பது தான் பிரதான முரண்பாடாக இருக்கலாம். ஆனுல் சகல இயக் கங்களும் அப்படி இல்லை என் பதை இவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். இயக்கங் களுக்கிடையில் ஒற்றுமைதேவை என்பதை அந்தந்த இயக்கங்

களே பூரணமாக உணராதவரை ஒற்றுமையைப் பற்றிப் பேசுவது வெறும் கேலிக் கூத்தாகும். பண பலமும், ஒரு சில ஆயுதங்களையும் வைத்துக்கொண்டே ஈழ விடுதலையை வென்றெடுத்துவிடலாம் என்று சிலர் சிந்திக்கும்வரை, இயக்கங்களுக்கிடையில் உண்மையான இணைவு என்பது ஏற்படாது. ஓர் இரு கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை வைத்துக்கொண்டே ஏனையோர் தமக்குப் பின்னுல் இணைந்து விட்டார்கள் என்று வெளிநாடுகளில் பொய்ப் பிரச்சாரம் செய்து பணம் சம்பாதிக்கும் ''தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்'' போன்ற இயக்கங்கள் தம்மை மாற்றிக் கொள்ளாதவரை இணைப்பு என்பது மிகவும் கடினமான ஒன்றே. ஏனைய விடுதலை இயக்கங்களின் சாதனைகளை தமதாக்கிக் கொள்ளலாம் என்ற சிந்தனை இருக்கும்வரை இணக்கம்அல்லது இணைவு என்பது மோசடித்தனமான ஒன்ருகவே இருக்கும்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்தவரை இயக்கங்களுக் கிடையில் குறைந்தது பரஸ்பரம் புரிந்துணர்வாவது இருக்கவேண்டும் என்பதே எமது கொள்கை. ஆனுல் வெளியில் மாக்சீயமும் நடைமுறையில் அராஜகவாதச் செயல்களிலும் ஈடுபடும் இயக்கங்களுடன் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வது எப்படி? எல்லா இயக்கங்களையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டு, தம்மை வளர்த்துக் கொள்ள நினைக்கும், குறுகிய எண்ணப் போக்குள்ள இயக்கங்களுடன்பேச்சுவார்த்தை நடத்துவது எப்படி? இவற்றையெல்லாம் தமிழ்பேசும் மக்கள் மிகவும் நன்ருகப் புரிந்துகொள்ள வேண்டும்.

எல்லா இயக்கங்களும் இணைவது உடனடியாக சாத்தியமில்லாமல் இருப்பினும் பரஸ்பரம் புரிந்துணர்வுள்ள இயக்கங்களாவது ஓர் கூட்டுக் கமிட்டியை உருவாக்குவது இன்றைய சூழ்நிலையில் மிகவும் அவசியமானதும் அவசரமானதுமாகும். தமிழர் விடுதலைக் கூட்டணியானது தொண்டமானுடன் சேர்ந்து ஈழ விடுதலையையே அடைவு வைக்க முயற்சிக்கின்ருர்கள். பெயர் பெற்றதாக கருதப்படும் விடுதலை இயக்கங்களோ என்ன செய்வதென்று தெரியாமலும், யாருடன் இணைவது என்று தெரியாமலும், சில குறுகிய இயக்க வளர்ச்சிகளை கருத்தில்கொண்டே தடம் புரள்கின்றன.

இந்நிலையில் ஈழ தேச மக்களுக்குச் சரியான தலைமையைக் கொடுக்க வேண்டியது ஈழப்போராளிகளின் கடமையாகும். எனவே பரஸ்பரம் நம்பிக்கை கொண்ட இயக்கங்களாவது ஒன்றிணைவதன் மூலமோ அல்லது ஒரு கூட்டுக் கமிட்டியை இவர்கள் உருவாக்குவதன் மூலமோதான் நாம் மக்களுக்கு சரியான ஓர் தலைமையை கொடுக்க முடியும். இலங்கையின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களில் 90சதவிகிதமானேர் இன்று சென்னையிலேயே முகாமிட்டுள்ளனர். பேச்சுவார்த்தைகள் பலனளிக்காவிட்டால் இவர்கள் எந்தெந்த நாட்டில் குடியேறுவார்கள் என்று சொல்ல முடியாது. ஏற்கனவே பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது மனைவி பிள்ளைகளுடன் தமிழகம் வந்துள்ளனர். இந்நிலையில் தமிழ்பேசும் மக்களுக்கு சரியானதோர் தலைமையை கொடுக்கவேண்டியதன் அவசி

யத்தையும் அவசரத்தையும் நாம் புரிந்துகொள்ளலாம்.

இதனடிப்படையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தன்னுடன் புரிந்துணர்வுள்ள விடுதலை இயக்கங்களுடன் மிக உண்மையான இணைப்பை கொண்டு வர சகல முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட இணைப்பு முயற்சிகளில் நாம் இறுதிவரை ஒத்துழைத்துள்ளோம். ஆனால் அவை தோல்வியிலேயே முடிந்துள்ளன. பின்னர் இயக்கங்களுக்கிடையில் புரிந்துணர்வு அவசியம் என்பதை கருத்தில் கொண்டு நாமும் கூட சில இயக்கங்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தினோம். ஆனால் அவையும் தோல்வியில் தான் முடிந்தது. ஏனெனில் நாம் ஏற்கனவே குறிப்பிட்டமாதிரி மற்ற இயக்கங்களை சாப்பிட்டு ஏப்பம் விட சில இயக்கங்கள் முனைந்ததே இதற்கான அடிப்படைக் காரணமாகும். இவை எமக்கு நல்ல பல படிப்பினைகளைத் தந்துள்ளன. இதனடிப்படையில் ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கக் கூடியதும் மக்களுக்கு சரியான தலைமையைக் கொடுக்கக் கூடியதுமான உண்மையான கூட்டை உருவாக்குவதில் நாம் விடாப்பிடியாக ஈடுபடுவோம். நாம் எப்பொழுதும் தோல்வியைக் கண்டு பயப்படுபவர்களோ, அஞ்சி நடுங்குபவர்களோ அல்ல. ஒவ்வொரு தோல்வியும் எமது உறுதியான முன்னேற்றத்திற்கான படிக்கட்டுகளே என்பதில் நாம் அசையாத நம்பிக்கைகொண்டுள்ளோம். எனவே விடுதலை என்னும் வேள்வித் தீயிலிருந்து எம்மை எந்தச் சக்திகளாலும் திசை திருப்பிவிட முடியாது.

விடுதலைப் போராட்டம் என்பது மக்களைப் பரந்த அளவில் திரட்டி அவர்கள் மூலமாகவே நடைபெற முடியும் என்பதை நாம் ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

எனவே ஒற்றுமையின் தேவையை உணர்வதிலும், அதற்காக தீவிரமாக, இதயசுத்தியுடன் வேலை செய்வதிலும் எம்மைவிட அக்கறை உள்ளவர்கள் வேறு எவரும் இருக்க முடியாது.

இந்த ஐக்கியம் அல்லது ஒற்றுமை என்ற விடயத்தில் எல்லோரும் முக்கியமான அம்சமொன்றை வசதியாக மறந்து விடுகிறார்கள். அதாவது இந்த ஒற்றுமை என்பது மக்கள் மத்தியில் சென்றால்தான் அதற்கு செயல்வடிவம் கிடைக்கும். இல்லையேல் இந்த ''ஒற்றுமை'' என்பதற்கு அர்த்தமேயில்லை. எனவே மக்கள் மத்தியில் இவ்வொற்றுமை சென்றடைய வேண்டுமானால் மக்களைச் சார்ந்த இயக்கங்கள் இருக்க வேண்டியது அவசியமாகும். எனவே இயக்கங்கள் மக்களைச் சார்ந்து தட்டி எழுப்பப் படவேண்டும் என்றஉண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த அடிப்படையில் இவ்ஐக்கியத்தை முன்னெடுத்துச் செல்ல ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று உறுதி கூறுகின்றோம். ●

# மானுட வரலாற்றின் புதிய அத்தியாயங்கள்......!

நீணெடும்
மானுட வரலாற்றின்
புதிய அத்தியாயங்கள்

வரலாறு காணுக்
களங்கங்களாய்
ஈழ பூமியில்
எழுதப்பட்டன

ஜெயவர்த்தனேக்களின்
சிரில்மாத்யூக்களின்
'ஜெயவேவா' கோஷங்களில்
செயல்ரூபங்களில்
ஹிட்லர்களின்
உயிர்த்தெழுதலாய்...

ஒரு புனித 'போயா'வின்
பௌத்த பிரதிக்ஞைக்கும் பின்னுல்
பௌத்தபிக்குகளின்
ஆசிகளோடு
போதிசத்துவரின்
புத்த தத்துவமும்
யுத்தமபமாக...

மானுடக் களைகளாம்
பேரின வாதச்
சிங்களக் காடையர்
காவல் நாய்கள்
ராணுவ ஆணவம்
புடைசூழ

பாசிச அரசின்
பயங்கர வாதம்
ஆடிய அந்த
நரவேட்டையின்
மனிதக் கசாப்பில்

ஆன்ம நாகரிகம்
மனித ஜீவிதம்
எல்லாமே அங்கு
சூறை போயின!
எல்லாமே அங்கு
எரியுண்டன!

இனி என்ன ?

நெட்டை மரங்களென
நெட்டுயிர்க்கும்
பெட்டைப் புலம்பல்களும்

நாளாந்தத்தில்
நமத்துப் போகும்
நபுஞ்சகக் கோபமும்

இன்னமும்
எத்தனை நாளைக்கு ?

அங்கே
ஆளும் வர்க்கத்தின்

அரச பயங்கரவாதம்
பிரயோகிக்கும்
பிரதான முரண்பாட்டையே
தாமும் பாவித்து
தலைச்சனான போராளிகள்
வியூகங்கள் வகுக்கின்றார்

இதோ...இன்னுமொரு
'பாஸ்டிலாய்'
'மட்டக்களப்புச்
சிறையுடைப்'பை
மக்கள் விடுதலைப் படையே
இதைச் சாதித்தது
புரட்சிகரமான
புதிய அத்தியாயத்தின்
ஒரு
மகத்தான மைல்கல்
மட்டுமே !

இன்னும்
உடைபட வேண்டிய
'பாஸ்டில்'களங்கே
ஒன்றிரண்டல்ல !
ஏராளமாய்...

ஆனால் அவை
சாத்தியமாவது
மட்டக்களப்புச்
சிறையுடைப்பைப் போல்
எந்த ரத்தமும்
சிந்தப்படாமல் அல்ல
ஆளும் வர்க்கத்தின்
ரத்தக் கடனை
ஆகக் கூடி
வசூலித்தே

அந்த
'பாஸ்டில்கள்' உடைபடும்

ஆமாம் !

துவக்குகளின்
பாஷைகளில் மட்டுமே
துரைத்தனம் பேசுமெனில்
வாய்மொழிகள் எல்லாமும்
காற்றில் தானே !
எழுத்தொப்பந்தங்கள் எல்லாமும்
நீர்மேல் தானே !

துவக்குகளில்
துவங்கிய தொடக்கம்
துவக்குகளாலேயே
நடக்குமெனில்
அதற்குத்
துவக்குகளால்தானே அடக்கம்

ஆமாம் !
நீணெடும்
மானுட வரலாற்றில்
நேர்ந்த
வரலாறு காணாக்
களங்கங்களை எல்லாம்
உட்செரித்து
அக்கருக்கிருட்டின்
கனத்த மௌனத்தில்
கருக்கொண்ட சோகங்கள்
வருநாளின் வைகறைகளில்
அங்கே சிவந்த
வசந்தோதயத்தை
ஜெகஜோதியாய்ப் பிரசவிக்கும்

-பொதிய வெற்பன்

# பொது நல அமைப்பு நாடுகளின் தலைவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை

இலங்கைவாழ் 3.7. மில்லியன் தமிழ் மக்கள் சிங்கள சோவனிச வாதிகளின் கையில் சிக்கி அல்லல்படும் நிலையினையும், அவர்களது நிதர்சன உரிமையாகிய சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தினையும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் பொதுநல அமைப்பு நாடுகளின் தலைவர்களாகிய உங்களது கவனத்திற்கு கொண்டுவர விழைந்துள்ளோம். தமிழ் மக்களது இந்நிலையானது-இலங்கைசுதந்திரமடைந்ததுடன் ஏற்பட்டது என்னும் வகையில் இதில் பொதுநல அமைப்பு நாடுகள், முக்கியமாக இங்கிலாந்து-தமிழ் மக்களது உரிமையினை நிலைநிறுத்தப்படுவதில் முக்கிய பொறுப்பு கொண்டுள்ளது என்பதையும் தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

கா்லனிய ஆதிக்கத்திற்கு முன்பு இலங்கைத் தீவில் தமிழ் இனம் வேறானதாகவும் சிங்கள இனம் வேறானதாகவும் காணக்கூடியதாக இருந்த தென்பதை ஐரோப்பிய ஆட்சியாளரும் சிங்களத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். சிங்கள மக்களும் தமிழ் மக்களும் தத்தமது பிரதேசத்தில் வாழ்ந்து வரும் இரு வேறான சமூகத்தினர் என்பதை 1920-ம் ஆண்டுகள் வரையிலும் ஆட்சியினர் ஏற்றுக் கொண்டு வந்துள்ளனர். இலங்கை நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியான வடக்கு கிழக்கு மகாணங்கள் ஈழம் எனப்படும் தமிழர்களின் பூர்வீகப் பிரதேசமாக உள்ளது. இப்பகுதி நிர்வாகம் 1833-ம் ஆண்டு வாககில் தான் ஆங்கிலேய ஆட்சியினரால் ஒருமுகப்படுத்தப்பட்டு இரு இனங்களையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து ஆட்சி செலுத்தினர்.

1948-ம் ஆண்டு இலங்கை சுதந்திர மடைந்தபோது சிங்கள மக்களுடன் சமத்துவமாக வாழலாம் என்கின்ற எண்ணத்தில் ஒற்றையாட்சியினை ஏற்றுக் கொண்ட தமிழர்கள் தமது உரிமைகளை பாதுகாக்கவென சில பாதுகாப்புகளை வேண்டியிருந்தும் அவை நிராகரிக்கப்பட்டன. சுதந்திரம் கிடைத்த சில மாதங்களிலேயே பத்து லட்சம் மலையகத் தமிழ் மக்கள் நாடற்றவர்களாக்கப்பட்டு வாக்குரிமை பறிக்கப் பட்டதன் மூலம் தமிழ் மக்களின் மனதில் உண்டான அச்சம் மேலும் உறுதிப் படுத்தப் பட்டது.

இதே வேளையில் தமிழர்களின் பாரம் பரிய பிரதேசத்தை சிங்கள மயமாக்கும் எண்ணத்துடன் தமிழ்ப்பிரதேசங்களில் ஆட்சியினர் சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்து நடை முறைப்படுத்தினர். 1948-ல் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள ஆதிக்கப் போக்கானது வளர்ச்சியுற்று காலாகாலத்தில் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள்

பறிக்கப் பட்டும் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப் பட்டும், இனஒழிப்பானது அடிக்கடி ஏற்படும் இனக்கலவரங்களாக உருவமெடுத்தது. இந் நடவடிக்கைகளில் மேலும் சில.

● 3000 சதுரமைல் ஈழப்பிரதேசத்தின் மூன்றில் ஒரு பகுதி சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. இப் பகுதிகளில் இனக் கலவரங்களின் தாக்குதல்களுக்கு தமிழ் பேசும் மக்கள் உட்படுத்தப் பட்டார்கள்.

பத்து லட்சம் மக்களுடைய குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப் பட்டது.

● சிங்களம் மட்டுமே அரசமொழியாக பிரகடனப் படுத்தப் பட்டது.

● தமிழ் பேசும் மக்கள் இந்து, முஸ்லிம், கிறித்தவ மக்களாக இருக்கையில் பௌத்த மதம் அரச மதமாக ஆக்கப்பட்டது.

● கல்வி, வேலைவாய்ப்பு, அபிவிருத்தியில் தமிழ் மக்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப் பட்டன.

● இனக் கலவரங்கள் அடிக்கடி ஏற்பட்டு தமிழ் மக்கள் ஆயுதப் படையினரால் இம்சிக்கப்படுவது நாடறிந்த நிகழ்ச்சி ஆகியுள்ளது.

● இந்த இனக் கலவரங்கள் தமிழ் மக்களுடைய சொத்துக்களை நாசமாக்கி அவர்கள் மத்தியில் பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

கடந்த முப்பத்தைந்து ஆண்டு காலத்தில் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு இரண்டாந் தரப் பிரஜைகள் என்னும் நிலைக்கு தள்ளப்பட்டனர். சமத்துவமான நிலையென்னும்வகையில் ஏற்படுத்தப்பட்ட உறவானது இன்றுஒடுக்குவோரும் ஒடுக்கப் படுவோருமாக மாற்றம் பெற்றுள்ளது. தமிழர்கள் சிங்கள மக்களின் எதிரிகளாக காட்டப்பட்டு இத்தீவில் இருப்பதற்கு எவ்வித உரிமையும் அற்றவர்கள் என்னும் கூற்று வலுப் பெற்றுள்ளது. கல்லூரிகளிலும் வெகு ஜனத் தொடர்பு சாதனங்களிலும், தமிழர் எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு உணர்வானது ஊக்குவிக்கப்பட்டது. சுதந்தரத்தின் பின்னும் முக்கியமாக 1956-இன் பின்னும் இனவெறித் தன்மை அரசியல் ரீதியாக ஸ்தாபன வடிவம் பெற்றுள்ளது. சிங்களச் சோவனிசத் தலைமையானது, நாட்டின் எல்லாவித அரசியல் பொருளாதார வீழ்ச்சிகட்கும் தமிழ் மக்களை காரணமாக்கியது. இதன் காரணமாக சிங்கள அரசியலில் யார் அதிகமாக தீவிர சிங்கள போக்கை கடைப் பிடிக்கின்றார்கள் என்னும் போட்டியே முக்கிய இடத்தைப் பெற்றது.

இக் காலத்தில் தமிழ் மக்களின் தலைவர்களெனப் பட்டவர்கள் இலங்கையின் சுதந்திர அரசியல் சாசனத்தில் முழுமையான நம்பிக்கைக் கொள்ள முடியாமல் இருந்தும் தமிழ் மக்களின் பிரச் பிரச்சனைகளைத் தீர்ப்பதெற்கென முதலில் ஒற்றையாட்சியும் பின்பு மாநில சுயாட்சியும் தற்போது தனிநாடு என்னும் கோரிக்கையையும் முன்வைத்துள்ளனர். பேச்சுவார்த்தைகளும், முறிக்கப்பட்ட ஒப்பந்தங்களும், நிறைவேற்றப் படாத வாக்குறுதிகளாக காலம் கடந்துவந்துள்ளது. இதில் 1940-ம் ஆண்டுகளில் சம பிரதிநிதித்துவம் நிராகரிக்கப்பட்டதும்

50,60-ம் ஆண்டுகளில் மாநில சுயாட்சி கோரிக்கை நிராகரிக்கப் பட்டுமுள்ளது. முன்னர் ஏற் பட்ட தோல்விகளின் காரணமாக தமிழ் மக்கள் 70-ம் ஆண்டுகளில் தமது ஈழநாட்டை மீள அமைத் துக் கொள்வதே சிங்களச் சோவனிச வெறித்தாக்குதல் களில் இருந்து தம்மைப் பாது காக்கவும், தமதுசுயநிர்ணய உரி மையை மீளப் பெறுவதற்கான ஒரே வழி என்னும் முடிவுக்கு வந்தனர்.

## யூலை 1983 நிகழ்ச்சிகளும் அதன் விளைவுகளும்

இவ்வருடம் யூலை மாதம் இலங் கையில் நடந்த கோர நிகழ்ச்சி கட்கு இங்கு விளக்கம் தேவை யில்லை. ஆயினும் யூலையில் நடந்த நிகழ்ச்சியானது 1956, 1958, 77, 81-ம் ஆண்டுகளில் நடந்த நிகழ்ச்சியிலும் விட வேறு பட்டவை என்பதை குறிப்பிட்டு கூறவேண்டியுள்ளது. முன்னைய கலவரங்களில் அரசினதும் ஆயுதப் படையினதும் பங்களிப்பு சிறிதளவு இருந்திருந்தாலும் இம் முறை திட்டமிட்டு அவர்களே முன்னின்று நடாத்தியுள்ளார்கள். இடது சாரி சக்திகள் இக்கல வரத்தை முன்னின்று நடத் தினுர்கள் என்ற ஆட்சியினரின் கூற்ருனது எவ்வகையிலும் நிரூ பிக்கப் படவில்லை என்பதில் அவை பொய்யான குற்றச் சாட் டாக மாறியுள்ளன. அதேவேளை யில் அரசின் பல அமைச்சர்களும் அரசு இயந்திரமும் கலவரங்களில் முழுமையாக பங்கெடுத்து நிரா யுதபாணிகளான அப்பாவித் தமிழர்கள் மீது போர் தொடுத் தனர் என்பதற்கு போதிய சான் றுகள் உள்ளன. இது வரை கால மும் திரு ஜே. ஆர். ஜயவர்த்தன வின் அரசானது எவரையும் தண் டிக்கவில்லை.

இதுபோன்ற பின்னணியில் தமிழ் மக்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்ற கூற் ருனது பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றது. சில மாதங்கட்கு முன்பு ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவிக்க காரணமாக இருந்த அரசு, பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு தீர்வை ஏற்படுத்தும் என்பதனை எவ்வாறு நம்ப முடியும். தமது வாழ்நாள் முழுவதும் தமிழர் எதிர்ப்பு கொள்கையை கடைப் பிடித்து வந்த திரு.ஜே.ஆர். ஜய வர்த்தனவை தமிழ் மக்கள் எங் ஙனம் நம்பமுடியும்? தமிழ் மொழி உரிமை பற்றிய சட்டங்களையே நடைமுறைப் படுத்த முடியாத அரசு தமிழர் பிரச்சனைக்கு நிரந் தரத்தீர்வு காண்போமெனக் கூறுகையில் என்ன கருத்து கொண்டுள்ளது.

## கடந்தகால ஒப்பந்தங்களும் அவற்றின் தோல்வியும்

தமிழ் மக்களின் பாராளுமன்றத் தலைமைக்கும் சிங்கள ஆட்சி யினருக்கும் நடந்த ஒப்பந்தங் கள் திரு. எஸ் ஜே. யு. செல்வ நாயகம் அவர்களும், திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயகாவும் அன்றைய தமிழர்பிரச் சனைபற்றி ஒரு ஒப்பந்தம் செய்ய பேச்சு வார்த்தை நடத்தினுர்கள். இதில் முன்வைக்கப்பட்ட ஒப்பந் தமானது மாவட்ட சபைகளை உள் ளடக்கியதாக இருந்தது. இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து இன் றைய ஜனுதிபதி ஜே. ஆர். தலை மையில் நடத்தப் பெற்ற போராட் டமும், பிரசித்திப் பெற்ற கண்டி யாத்திரையையும் இன்றைய ஜனுதிபதி அவர்களே முன் னின்று நடாத்தினுர். இதன் காரணமாக ஒப்பந்தம் கிழித் தெறியப் பட்டது.

1965-ம் ஆண்டு திரு. டட்லி சேனநாயக்கா செல்வநாயகத்

துடன் மாவட்டசபைகள் பற்றி ஒரு ஒப்பந்தம் செய்ய முன் வந்தார். இம் முறை சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் தமது எதிர்ப்பைத் தெரிவித்ததால் யூ.என்.பி யினரின் இவ் வொப்பந்தமும் தடைப் படுத்தப் பட்டது.

1977-இல் யூ.என்.பி ஆட்சியினர் தமிழ் மக்களுடைய பிரச்சனையை தீர்ப்பதற்கென ஒரு அனைத்துக் கட்சி மகாநாட்டைக் கூட்டுவதெனக் கூறி ஆட்சிக்கு வந்தனர். 7 ஆண்டுகள் சென்றதும் இந்தவகையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை ஆயினும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பலதடவைகள் ஆட்சியினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இப்பேச்சுவார்த்தைகள் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு ஏமாற்றத்தை அளித்ததே தவிர எவ்வித நன்மையும் அளிக்கவில்லை. தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க கொண்டுவரப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைகள் எவ்வித அதிகாரமும் வழங்கப்படாமல் ஏட்டுச் சுரைக்காயாகி ஏமாற்று மோசடியாக முடிந்தது. அவை கிராமச்சபைகள் போல காட்சி அளித்தன.

திரு. அமிர்தலிங்கம் இதுபற்றிக் குறிப்பிடுகையில் யூ. என் பினுடனான பேச்சுவார்த்தைகள் எவ்வித பயனும் அளிக்கவில்லை எனவும் த. வி. கூவி னருக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இழக்க காரணமாக இருந்ததெனவும் குறிப்பிட வேண்டி இருந்தது.

## இன்றைய நிலையில் பேச்சுவார்த்தைகள்

யூலை இனக் கலவரத்தின் பின் ஆட்சியினர் இந்திய அரசின் நல்லெண்ணத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட முன்வந்துள்ளனர். கடந்த காலத்தில் இப் பேச்சு வார்த்தைகள் காலத்தை வாங்குவதற்கே பயன்படுத்தப்பட்டன. தமிழ் மக்கள் இவற்றின் மீது நம்பிக்கை வைப்பதாய் இருந்தாலும் அரசு இந்நிலையினை எந்தளவுக்கு மனமுவந்து ஏற்றுக் கொண்டுள்ளது என்பது கேள்விக்குறியாக உள்ளது. சிறிலங்கா ஆட்சியினர் கடைப்பிடித்து வரும் இரட்டை வேடம் அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வட முனையில் சுமார் 45,000 சிங்கள மக்கள் அரசு உதவியுடன் அரசின் சாதனங்களை பயன்படுத்தி மேற்கொண்டுள்ள செய்தியிலிருந்து நன்கு தெரிய வருகின்றது. அதே வேளையில் வடக்கு, கிழக்கில் குடியேற்றப்பட்ட மலையகத் தமிழ் மக்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகின்றது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள அதே வேளையில் இலங்கையின் எல்லாப்பகுதியிலும் இன விகிதசார அடிப்படையில் குடியேற்றங்களை ஏற்படுத்துவற்கு உறுதி பூண்டுள்ளதாத சிங்கள பௌத்த தலைவர்களுக்கு கூறியுள்ளார். இது பாரம்பரிய தமிழ் பிரதேசங்களில் சிங்களவரைப் பெரும்பான்மையாக்குவதற்கான செயல் என்பதை நாம் இங்கு குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

இவ்வறிக்கையின் மூலம் தற்போது நடைபெறும் பேச்சுவார்த்தையின் பின்னணியை சர்வதேச சமூகத்திற்கு பிரதானமாக பொதுநல அமைப்பு நாடுகளின்

தலைவர்களுக்கு தெரிவிக்க முற்பட்டுள்ளோம். ஈழத் தமிழ் சமூகத்தின் சார்பில் இந்நிலைகளை உங்களுக்குள்ள அரங்குகளில் முன் வைக்குமாறு வேண்டுகின்றோம்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு நியாயமானதும், நிரந்தரமானதுமான தீர்வு என்னும் வகையில், எமது மக்களின் சுய நிர்ணய உரிமையை பிரயோகப்படுத்துவதாக உள்ள ஒருதீர்வை நாம் வேண்டுகிறோம்.

-ஈழ மக்கள் புரட்சிகர
விடுதலை முன்னணி

---

OOOOO

# ஈழச் செய்திகள்

OOOOO

ஃ 9-11-83 அன்று கூடிய சிறீலங்கா கபினட் கூட்டத்தில் அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளரும் கலந்து கொண்டார். அக் கூட்டத்தில் ஈழ விடுதலையை ஒடுக்குவதற்கு அமெரிக்கா முழு ஒத்துழைப்பையும் அளிக்கும் என்றும் இவர் உறுதி கூறியதுடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் திருகோணமலைத் துறைமுகத்தை தமிழ்பேசும் மக்களிடம் கையளிக்க வேண்டாம் என்றும் கூறியுள்ளார். மேலும் அவர் பேசுகையில், ஈழ விடுதலைக்காகப் போராடும் இளைஞர்களை வருடக் கணக்காக சிறைகளில் அடைத்து வைத்து சித்திரவதை செய்வதால் உலக நாடுகளின் மனிதாபிமானம் மிக்க மக்களிடமும், அரசுகளிடமும் எதிர்ப்பு உருவாகுவதால், ஐயத்திற்கிடமானோரை அந்த இடங்களிலேயே சுட்டுக்கொள்ளும்படியும் புத்திமதி கூறியுள்ளாராம். தனது நாட்டு நிலைமைகளை இரகசியமாகத் தீர்மானிக்கும் கபினட் கூட்டத்தில் முதல் முறையாக அந்நியநாட்டு மந்திரியொருவர் கலந்து கொண்டது இதுவே முதல்தடவை.

(தகவல்-ஈழமக்கள்
செய்தித் தொடர்பு நிலையம்)

ஃ டெல்லியில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் பார்த்தசாரதிக்கும் நடந்த கலந்துரையாடலில், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வடக்கு, கிழக்கை இணைத்த மாநில சுயாட்சியை வலியுறுத்தியதாகவும்,பொலிஸ் அதிகாரங்கள் உட்பட பல அதிகாரங்களை இவர்கள் கோரியதாகவும், பின்னர் இது ஜே. ஆரிடம் தெரிவிக்கப்பட்டபோது இதை அவர் மறுத்துவிட்டதாகவும் அறியப் படுகின்றது.

ஃ தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சார்ந்த சில உறுப்பினர்கள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப்

படையைச் சார்ந்த சில தோழர்களை கடத்திச்சென்று சித்திரவதை செய்துள்ளனர். மட்டக்களப்புசிறைஉடைப்பு சம்பந்தமாக பொய்யான பல தகவல்களை வெளியிட்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் துண்டுப் பிரசுரம் ஒன்றிற்கு, பதிலளித்து துண்டுப் பிரசுரம் வெளியிட்டு விநியோகித்த தோழர்களே இப்படிச்சித்திரவதைக் குட்படுத்தப்பட்டனர். இதை கண்டித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வெகுஜனப் பிரிவும், இராணுவப் பிரிவும் பலத்த கண்டனங்களை தெரிவித்துள்ளதோடு தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் பொய்த் திரைகளை கிழித்தெறிந்து அவர்களை அம்பலப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

ஃ சிறீலங்கா அரசின் பட்ஜெட் 16-11-83 அன்று நிதி அமைச்சரால் தாக்கல் செய்யப்பட்டது. இதில் சிறீலங்கா அரசின் இராணுவச் செலவுக்கு முன்னரைவிட ஒரு மடங்கு அதிகமாக இம்முறை ஒதுக்கப்பட்டுள்ளதாம். பட்ஜெட் விவாதத்தில் நிதி அமைச்சர் பேசும்போது அந்நிய நாட்டுப் படையெடுப்பினுல் சிதைவுற்ற நாட்டினைவிட மிக மோசமான நிலையில் இன்று இலங்கைஇருக்கின்றதென்று குறிப்பிட்டார். சிங்களக்குண்டர்களும், சிங்கள இராணுவமும் செய்த அட்டூழியத்தால் இலங்கையின் பொருளாதாரமே ஆட்டங்கண்டுள்ளது. இனியாவது சிறீலங்கா அரசு இதை உணருமா?

ஃ ஜெயவர்த்தனு டெல்லிக்கு வரும்பொழுதுகறுப்புக்கொடி காட்டி தமது எதிர்ப்பை வெளியிட முற்பட்ட திமுக எம்.பி.க்களும், தி.க.தலைவர்களும் ஏனைய ஐநூறு பேரும் டெல்லி பொலீசால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஃ டெல்லியில் பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெறுகின்றது. இதில் ஜே. ஆர். ஜயவர்த்தனு உட்பட நாற்பது நாட்டுத் தலைவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள். இம் மாநாட்டிற்குவந்திருந்த சர்வதேச தலைவர்களிடம் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஓர் அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர். இதில் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் சிறீலங்கா அரசின் காட்டுமிராண்டித்தனமான இன ஒழிப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளது விரிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. அத்துடன் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் படியும் இது வலியுறுத்துகின்றது.

ஃ கடந்த மாதம் முல்லைத்தீவில் ஐயத்தின்பேரில் 30 ஈழப் போராளிகள் கைது செய்யப்பட்டனர். மாங்குளம் இராணுவ முகாமில் வைக்கப்பட்டிருந்த இவர்களில் பன்னிரெண்டு பேருக்கு குதிக்கால் நரம்பு வெட்டப்பட்டுள்ளதாக நம்பத் தகுந்த செய்திகள் கிடைத்துள்ளன. பயிற்சி பெறச் சென்ருர்கள் என்ற ஐயத்தில் இவர்கள் கைதானதால் இவர்களுக்கு இந்தக் நேர்ந்ததாம். ○

...ate Technology ...
21, POINT P... ROAD
NALLUR, JAFFNA
No.............

# உங்கள் கவனத்திற்கு

மாணவத் தோழர்களே, நண்பர்களே, ஈழ முழக்கத்திற்கான கவிதை, கட்டுரை மற்றும் துணுக்குகள் தங்களிடம் இருந்து எதிர் பார்க்கப் படுகின்றன. உங்களது படைப்புகள், முற்போக்கானவை யாகவும் புதியதோர் சமுதாயத்தை படைக்க உற்சாக மூட்டுபவை யாகவும் இருப்பது விரும்பத்தக்கது. அத்துடன் ''ஈழ முழக்கம்'' பற்றிய ஆரோக்கியமான விமர்சனங்களும் தங்களிடம் இருந்து எதிர் பார்க்கப்படுகின்றது. இது எமது சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உற் சாகத்தைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். உங்களது ஆக்கங்கள் விமர்சனங்களை

ஈழ மாணவர் பொது மன்றம்
த. பெ. எண்: 4967, சென்னை-17

என்ற முகவரிக்கு அனுப்பவும்.

---

# ஈழ முழக்கம் சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு சந்தா | 15 00 |
| ஆறு மாத சந்தா | 7 00 |
| தனிப்பிரதி | 1 00 |

சந்தா தொகைக்குத் தகுந்த போஸ்டல் ஆர்டர் எடுத்து கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**எம். லூகியதாசன்**
தபால் பெட்டி எண் : 4967
சென்னை—600 017

---

ஈழ மாணவர் பொதுமன்றத்திற்காக எம். எஸ். தாஸ் அவர்களால் வெளியிடப்பட்டது. தொடர்பு முகவரி : Post Box No. 4967, Madras-17 அச்சிட்டது : விசாலம் பிரிண்டிங் ஹவுஸ், சென்னை-24

PRIVATE CIRCULATION ONLY

மாணவர் பொது மன்றம்

GUES

PRINTED MATTER

பெயர் ______________________

விலாசம் ______________________

______________________

**G. U. E. S.**
Post Box No. 4967
T. Nagar,
MADRAS-600 017.